


# தொண்டன்

ISSN: 2012-6352
Reg. No.: 187317

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

டிசம்பர் - 2018

LORD, IF I'M EVER UNGRATEFUL
FORGIVE ME

நிம்மதிக்கான இரண்டு வழிகள்:
விட்டுக்கொடுங்கள்
இல்லை
விட்டுவிடுங்கள்

2018

ஆரம்பம் 1969 பெப்ரவரி

அறிவோம்... அறிவிப்போம்...

# தொண்டன்

**டிசம்பர் - 2018**

**மலர் - 50** **இதழ் - 11**

✤ ஆசிரியர்
அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ துணை ஆசிரியர்
பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு
சுபாஜெனி சங்கர்



✤ வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்
வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## உள்ளே...

அன்புடன் உங்களோடு ........................ 01
ஒளி பிறந்தது ........................ 02
நள்ளிரவு நட்சத்திரம் ........................ 04
அன்பை விதையுங்கள் ........................ 05
பாடசாலையும் நாமும் ........................ 06
மாணவர் பக்கம் ........................ 07
எது எனது கடைசி ஆசை ........................ 08
தலைவனை இழந்த சமூகம் ........................ 09
கடுகுக் கதை ........................ 09
உனக்கு இங்கே இடமில்லை ........................ 10
கிறிஸ்து பிறப்பு சிறப்புப் போட்டி ........................ 12
எண்ணிப்பார்க்கையில் ........................ 13
அவன் ஒரு கூலித் தொழிலாளி ........................ 14
சின்ன விசயங்கள் சிறந்த ........................ 15
பெறுமதி தெரிந்தால் ........................ 16
இலக்கிய மஞ்சரி ........................ 17
இதுதான்டா அரசியல் ........................ 18
அன்பினால் அரவணைக்கும் ........................ 20
நத்தாரில் நற்சிந்தை ........................ 22
கண்ணுறங்கு கண்மணியே ........................ 23
வாழ்த்துகிறோம் ........................ 25
வினாவிடைப் போட்டி ........................ 26
திருவிவிலியம் கற்போம் ........................ 27
அறிவை வளர்ப்போம் ........................ 28


✷ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்) ✷

SOCIAL COMMUNICATIONS CENTRE
**P.O. BOX - 44**
**BATTICALOA.**
**TEL : 065 2226486**
**E-MAIL : battiscc@gmail.com**

விலை: : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

## இயேசுவுக்கு இடம் கிடைக்கவில்லை ...




அன்புமிக்கவர்களே!

ஒரே ஒரு முறை பிறந்த கிறிஸ்துவை ஓராயிரம் முறை கொண்டாட வேண்டுமா என்ற கேள்விக்கு அனேகமானவர்கள் விடைதேடிக்கொண்டிருக்கிறார்கள். பிறப்புக்கள் பலவிதம். அதிலும் இயேசுவின் பிறப்பு அனைவரையும் திரும்பிப்பார்க்க வைத்து உலகத்தையே ஆச்சரிப்பட வைத்த உண்மையாக இருக்கிறது. சூழ்ச்சிமிக்க ஏரோதுக்கு இடம் கிடைத்தது, படை வீரர்களுக்கு இடம் கிடைத்தது, வசதி படைத்தவர்களுக்கு இடம் கிடைத்தது. ஆனால், இயேசுவுக்கு இடம் கிடைக்கவில்லை என்பது எம்மை சிந்திக்க வைக்கிறது. காரணம் அவர் ஏழையாகப் பிறந்தார். ஏழைப் பெற்றோருக்குக் குழந்தையானார். ஏழையாகப் பிறந்தவர் எல்லாருடைய இதயங்களிலும் தனக்கென்று ஓர் இடத்தையும் பிடித்துக்கொண்டது எம்மை ஆச்சரியப்பட வைக்கின்றது.

இயேசு பிறப்பதற்கு முன்பே பல புதுமைகள் நடப்பதை வேதம் சொல்கிறது. கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட எலிசபெத் கருவுற்றார், இறைவன் முன் நிற்கும் வானதூதர்கள் மண்ணுலகிலே இறைசெய்தியுடன் இறங்கி வருகிறார்கள். கணவனை அறியா கன்னி கருவுற்றார் என்று மண்ணுலகமே ஆச்சரியமடைகிறது. அதுமட்டுமல்ல இயேசு பிறந்த பிறகு ஏழை இடையர்களுக்கு முதல் நற்செய்தி சொல்லப்படுகிறது. இடையர்கள் ஆயனை முதன் முதல் பார்க்கின்ற பாக்கியம் கிடைக்கிறது. அரசர்கள் ஏழையை வணங்கிய சம்பவம் சரித்திரமாக மாறுகிறது. இப்படி எல்லாமே வழமைக்கு மாறாக வித்தியாசமாக வரலாற்றில் இடம்பிடிக்கிறது. குழந்தையின் பிறப்பே இப்படியென்றால், இயேசு வளர வளர நம்மோடு இருக்கப்போகின்றார், எம் வாழ்வின் புயலை அடக்குவார், எம்முடைய நோய்களைக் குணமாக்குவார், குறைகளைத் தீர்ப்பார், குடும்பங்களை நிறைவாக ஆசீர்வதிப்பார், சிறப்பாக எம்மோடு இருந்து எம் தேவைகளை நிறைவேற்றுவார் என்பதில் சந்தேகமேயில்லை. இனிமேல் நான் அநாதை அல்ல, துன்பம் எனக்குக் கிடையாது, நான் வேதனைப்படவேண்டியதில்லை, நான் ஏழை என்று யாரும் என்னை ஒதுக்கிவிடப்போவதில்லை என்று நாம் அனைவரும் துணிந்து சொல்வோம். காரணம் ஏழைகளை நேசித்து பாராமரிக்க கடவுளின் மகன் ஏழையாக எங்கள் ஒவ்வொருவருடைய குடும்பங்களிலும் பிறப்பார்.

துப்பாக்கியோடு அவர் வந்திருந்தால்
பீரங்கியால் அவரைத் தாக்கியிருப்பேன்
கத்தியோடு அவர் வந்திருந்தால்
வாளால் வெட்டி சாய்த்திருப்பேன்
ஆனால் அவர் உண்மையை, நீதியை, ஏழ்மையை,
தாழ்ச்சியை கொண்டுவந்தார் .....
அவற்றை வெல்வதற்குரிய ஆயுதம் என்னிடம் ஒன்றுமில்லை.

இயேசுவை நெருங்கிச் சென்று தலைவணங்குவோம். குடும்பங்களை அவரிடம் ஒப்படைப்போம். குழந்தை இயேசுவின் வரங்களைப் பெற்றுக்கொள்வோம்.

**அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும்**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**



பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை
ஆயர் - மட்டக்களப்பு மறைமாவட்டம்.

உலக வரலாற்றில் இயேசுவுக்கு இந்த ஆண்டு 2018வது பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது. வாழுமுன் வரலாறு வகுத்தவர் வரலாற்றில் நுழைந்த நாள், அவரது பிறந்த நாள். இயேசு உலகில் தோன்றியது முதல் இறக்கும் வரை ஒரு பிறந்த நாளும் கொண்டாடப்படவில்லை. ஏழ்மை, வறுமை, பகைமை, கொடுமை நிறைந்த இருள்சூழ் நிலையின் மத்தியில் பிறந்தார். அன்பு, அமைதி, மன்னிப்பு, மனித நேயம் போன்ற ஒளிக் கீற்றுக்கள் கோலோச்ச வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இயேசு தம்மை முற்றிலும் தாழ்த்தி அன்னை கன்னி மரியாவின் வயிற்றில் உதித்தார். அருபியான கடவுள் உருவமானார். எல்லையற்றவர் எல்லைக்குள் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ளச் சித்தமானார். தெய்வம் மனிதரானார்.

**இறைவாக்கினர் பார்வையில் ....**

உலக வரலாற்றில் சிறப்பிடம் பெறுவது இறைமகன் இயேசுவின் பிறப்பு. உலகம் தோன்றிய நாளிலிருந்து இயேசுவின் பிறப்பிற்காகவே வரலாறு காத்திருந்தது. இறைவனும் பல இறைவாக்கினர் வழியாக அவரது பிறப்பைப் பற்றி முன்னறிவித்து வந்தார். பல நூற்றாண்டுகளாக மக்கள் எதிர்நோக்கிய நிகழ்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது இறைவாக்கினர் எசாயாவின் செய்தி: "ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவர் 'இம்மானுவேல்' என்று பெயரிடுவார்" (எசா 7:14). "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசா 9:2).




மேற்கூறப்பட்ட இறைவாக்கின் மூலம் இருள் சூழ்ந்த நாட்டில் ஒளி மட்டும் உதிக்கும் என வாக்களிக்கவில்லை. ஒளி வடிவமான ஒரு குழந்தையின் பிறப்பையும் வாக்களித்தார். இப்பகுதியில் கூறப்பட்டுள்ள இறைவாக்கு இயேசுவில் நிறைவேறுவதாக நற்செய்தியாளர் மத்தேயு குறிப்பிடுகின்றார் (மத் 4:15-16). இயேசுவின் நற்செய்தியும், அருங்குறிகளும் அவரைப் பேரொளியாகக் காட்டின. நற்செய்தியாளர் யோவானும் இயேசுவை ஒளியாகக் காண்கிறார்: "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்துகொண்டிருந்தது (யோவா 1:9). மேலும், இயேசுவே "நானே உலகின் ஒளி" (யோவா 8:12) என்கிறார். இருளின் ஆதிக்கம் அதிகமாக இருந்த அந்த நேரத்தில் இருளைப் போக்கும், 'ஒளி'யை அனுப்புவதாக வாக்களிக்கிறார் கடவுள். அந்த ஒளிதான் "வியத்தகு ஆலோசகராக, வலிமை மிகு இறைவனாக,

என்றுமுள தந்தையாக, அமைதியின் அரசராக" இயேசுவில் வெளிப்பட்டது. எசாயா வழியாக ஆண்டவர் அருளிய இந்த இறைவாக்கு இயேசுவில் முழுமை பெற்றது. கி.பி. 313இல் உரோமைப் பேரரசர் கொன்ஸ்டன்டைன் தனது அரசவையில் இயேசு கிறிஸ்துவை ஏற்ற பின் இவர் பிறப்பை மையப்படுத்தி உலக வரலாற்றை கி.மு. என்றும் கி.பி என்றும் பிரித்து எழுதிடச் செய்தார்.

**'தேம்பாவணி' தரும் செய்தி:**

இத்தாலிய தமிழ் ஏந்தல் வீரமாமுனிவரின் கைவண்ணத்தில் உருவாகிய தேம்பாவணிக் காப்பியத்திலும் குழந்தை இயேசுவை அன்னை மரியா ஈன்று புறம் தந்த செய்தியினை நுட்ப மாகவும், திட்பமாகவும் ஒரு பாடலில் கூறி யுள்ளார்.

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய,
இவயை மூன்றினும் இழிவில் கன்னியாய்,
அலகில் மூன்றினுள் நடுவ மைந்தனை,
நிலவு மூன்றினும் நிப்ப ஈன்றனள். (10:94)

மூவுலகிலும் ஒப்பற்றவர் மரியா. முக்காலத் திலும் பழுதில்லா கன்னி மரியா மூவொரு கடவுளுள் ஒருவராகிய இயேசுவைச் சூரியன் - சந்திரன் - விண்மீன்களாகிய மூன்று சுடர்களைக் காட்டிலும் சிறந்து விளங்கும் வகையில் பெற்றுத் தந்தார். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூவொரு கடவுளுள் நடுவராகத் திகழ்பவர் இறைமகன் இயேசு. குழந்தை இயேசு உலகை மீட்பதற்காகவே வந்து பிறந்தார். இங்கு மீட்பர் என்பது இருளைப் போக்க வந்த ஒளியான கிறிஸ்துவே என்பது வெள்ளிடைமலை.

**மும்மந்திரங்கள்:**

அண்டங்கள், கோள்கள், கடல்கள், வான் மலைகள் ஆகியவற்றைப் படைத்த வல்லமை மிக்க கடவுள், தாம் மனிதனை அளவிட முடியாத அளவுக்கு அன்பு செய்கிறோம் என்பதை உணர்ந்து, குழந்தையாகப் பிறந்து, **"நான் உன்னோடு இருக்கிறேன்". "நான் உன்னை அன்பு செய்தேன்". "என்னை நீ நம்பலாம்"** என்ற மும்மந்திரங்களைக் கூறி, அச்சமின்றி வாழ நம்மை அழைக்கிறார். இம்மூன்று கிறிஸ்மஸ் மந்திரங்களையும் நன்றாகக் கற்றுக்கொண்டவர்கள், கிறிஸ்மஸ் விழா இருளகற்றும் ஒளியின் விழா என்ற வகையில் ஏழ்மை, பசி - பட்டினி, வன்முறை, பயங்கரவாதம், ஊழல், அநீதிகளை எதிர்த்துப் போராடுவர். அவர்களின் இவ்வன்பு முயற்சிப் போராட்டங்களில் இறைவன் மனிதர்களுடன் இருக்கிறார். இறைவன் மனிதர்களை அன்பு செய்கிறார், இறைவனை நம்புகிறவர்கள் மீட்ப டைவர் என்பதனை வெளிப்படுத்துவனவாக இருக்கும். நாம் கடவுளை மறந்தாலும் கூட, கடவுள் நம்மை மறப்பதில்லை, கைவிடுவதில்லை என்பதை இறுதியில் உறுதி செய்யவே இறைவன் மனிதரானார்.

வாடிக்கையாக வரும் விழாக்களுள் இதுவும் ஒன்றாக, மாற்றம் ஏதுமின்றி வந்து போகும் சடங்காக, தகுதியைக் காட்டும் தருணமாக இதைக் கருதாமல், மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய தங்க விழாவாகக் கருதி செயல்படுவோம். வரலாற்றை மாற்ற வந்தவர் கிறிஸ்து. புதிய வானம், புதிய பூமியை ஏற்படுத்த வந்த வர் கிறிஸ்து. இயேசு தோன்றிப் பல நூற் றாண்டுகள் கடந்தோடிய பிறகும், இன்று வரை யில் அடிமைகளாகவும், ஊமைகளாகவும், ஆமைகளாகவும் வாழும் இழிநிலை ஒழிய வேண்டும். தனித் தனித் தீவுகளாய் ஒதுங்கி வாழும் குடும்பங்கள் உறவாடலில் இணைய வேண்டும். வறுமையிலும், இன ஒதுக்கலிலும் வாடுவோரின் மறுமலர்ச்சிகளாய் நாம் நம்மைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். உடைந்த உறவுப் பாலங்கள் சீர்படுத்தப்பட வேண்டும்.

**இருளகற்றி ஒளி ஏற்றுவோம்:**

நாமும் கிறிஸ்துவின் இருளகற்றும் ஒளியாகச் செயல்படுவோம். ஏழைகள், எளியவர்கள், விளிம்பு நிலை மக்கள் முகங்களில், மனங்க ளில், இதயங்களில் மகிழ்ச்சியை ஏற்படுத்த முயல்வோம். கடவுள் மனிதருக்கு மகிழ்ச்சியின் இரகசியத்தை வெளிப்படுத்திய நன்னாள் கிறிஸ்து பிறந்த நாள். மகிழ்ச்சியின் இரகசியத்தை அறிந்த மனிதர்கள் மகிழ்ந்து கொண்டாடும் விழா கிறிஸ்மஸ் விழா. மனிதனுக்கு மகிழ்ச்சி எதில் கிடைக்கிறது? "பெறுவதிலும் தருவதே இன்பம்

என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூருங்கள்" என பவுல் அறிவுறுத்துகின்றார் (தி.பா. 20:35). உண்மையான மகிழ்ச்சி எது என்ற கேள்விக்கு ஒரு விடையுண்டு. அன்பால் கிடைக்கிற மகிழ்ச்சியே உண்மையான, நிரந்தரமான மகிழ்ச்சியாகும். மனித குலம் அந்த அன்புத் தேடலை மையப்படுத்தியே வாழ்கிறது. இறை இயேசுவின் பிறப்பு அன்பு கலந்த மகிழ்ச்சியை அறிவிக்கின்றது. சாதி, மத பேதமின்றி, உலகினர் கொண்டாடும் கிறிஸ்மஸ் பெருவிழா அன்று நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அன்பின் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வோம். உண்மை, அன்பு, நீதி, மன்னிப்பு, ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் போன்ற நற்செய்தி மதிப்பீடுகளை வாழ்ந்து இருளகற்றி ஒளியேற்றுவோம்.

**அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**




இது ஒரு சிறந்த கிருமி நாசினி. இந்தப் பூ வீட்டில் இருந்தால் சின்னஞ் சிறு கிருமிகள் ஓடிவிடும். இப் பூ உடல் குளிர்ச்சிக்கு ஏற்றதாகும். அடிக்கடி வரும் ஏப்பத்தை நிறுத்தும். வயிறு சுத்தமாகவும், பித்தம் போக்கவும், தொண்டைப் புண் ஆறவும், காது வலி நீங்கவும் இப்பூ கைகண்ட மருந்து. வேப்பம் பூவை தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் குளித்து வர பொடுகு குறையும்.

**அன்று தூய பாலன் அமைதி தர மீட்பரானார்**
**இன்றோ அமைதி அது தேடியும் கிடைக்கவில்லை**
**அலகையின் பின் விரைந்தோடும் மானிடா நீ**
**எப்போது உள அமைதி பெறுவாய் சொல்.**




## நள்ளிரவு நட்சத்திரம் .... நமக்காக ....



**நடு நிசியில் ஓர் விடிவெள்ளி**
**நமக்காகத் தோன்றிட ....**
**தொடு வானில் தேவ தூதர்களும்**
**துதிகளும் பாடிட ....**
**கடும் குளிர் வேளையிலே தேவமகன்**
**குடிலமைதனிலே பிறந்திட ....**
**இடையர்களும் தேடி வந்து அங்கே**
**இன்புற்று மகிழ்ந்திட .....**
**விடை தெரியா முகத்துடன் ஞானிகளும் ....**
**விண்மீனைத் தொடர்ந்திட ....**
**கடைசியில் கண்டனரே சிசுவாய்**
**கன்னி மரி மடியினிலே .....!**
**நடு நிசியில் ஓர் விடிவெள்ளியாய்....!!**

- [illegible]

# அன்பை விதையுங்கள்!


இணையம்

ஒரு இளைஞர் தினமும் ஒரு பாட்டியிடம் ஆரஞ்சு பழங்களை வாங்குவார். பழங்களை எடை போட்டு வாங்கி பணம் கொடுத்த பின் அந்தப் பழங்களில் இருந்து ஒன்றை எடுத்து பிய்த்து வாயில் போட்டு விட்டு,

"இந்த பழம் மிகவும் புளிப்பாக உள்ளது"

என்று அந்தப் பாட்டியிடம் கொடுத்துச் சாப்பிட சொல்லி புகார் செய்வார்.

உடனே பாட்டி ஒரு சுளையை வாயில் போட்டு விட்டு...,

"இல்லையேப்பா.., நல்லா தானே இருக்கு" என்பார்.

உடனே அந்த இளைஞர் எதுவும் பேசாமல் மீதி பழங்களை எடுத்துக் கொண்டு செல்வார்.

இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அவர் மனைவி அவரிடம்,

"ஏன் ... பழங்கள் நல்லா இனிப்பாகத் தானே இருக்கு ....!! ஏன் தினமும் இப்படி நல்லா இல்லை என்று பொய் சொல்றீங்க" என்று கேட்டாள். அதற்கு அந்த இளைஞர் சிரித்து கொண்டே மனைவியிடம்.....,

"அந்த பாட்டி நல்ல இனிப்பான பழங்களைதான் விற்கிறார். ஆனாலும், தனக்கென்று ஒரு பழத்தைக் கூட சாப்பிட்டு இருக்கமாட்டார்....!! நான் இப்படிக் குறை கூறி கொடுப்பதால் தினம் அவர் காசு இழப்பின்றி ஒரு பழத்தைச் சாப்பிடுகிறார்" என்றார்...!!

தினமும் நடக்கும் இந்த நாடகத்தை அருகில் இருந்த காய்கறி வியாபாரி கவனித்து விட்டு, அந்த பாட்டியிடம்,

"அந்த ஆள் தினமும் உன் பழங்களை குறை கூறுகிறான், இருந்தும் நீ ஏன் அவனுக்கு எடை அதிகமாக போட்டு பழங்களை கொடுக்கிறாய்....?"

என்று கேட்டான். உடனே அந்த பாட்டி புன்னகைத்துவிட்டு....,

"அவன் என்னை தினமும் ஒரு பழத்தை சாப்பிட வைப்பதற்காகவே இப்படி குறை கூறுவது போல கூறி... கொடுத்து சாப்பிட வைக்கிறான். இது எனக்கு தெரியாது என்று நினைக்கிறான். நான் எடை அதிகமாக பழங்களை போடுவதில்லை, மாறாக அவனது அன்பில் எனது தராசு கொஞ்சம் சரிந்துவிடுகிறது..." என்றார் அன்போடு....

இப்படிப்பட்ட சின்ன சின்ன அன்பில் தான் ஜீவன் இன்னும் இருக்கு.....!!

அன்பை விதையுங்கள்"....!!

அதையே அறுவடை செய்வீர்கள்".......!!


**மற்றவர்கள் உனக்கு என்ன செய்யக் கூடாதென்று நினைக்கிறாயோ, அதை நீயும் மற்றவர்களுக்குச் செய்யாதே. குற்றங்களில் பெரிய குற்றம், தன் குற்றங்களை திருத்த முயலாததுதான்.**

**- கன்ஃபூஷியஸ்**

உலகில் வாழும் மனிதருக்கு
உயர்வளிக்கும் சோலை
உண்மைப் பாடசாலை
உலகிலேது இதற்கு மேலே ....!

கல்விகற்கும் பாடசாலை
கண்களுக்கு ஒப்பாம்
இல்லை இதற்கு மேலெதுவும்
இதயம் போலே காப்போம் ....

# பாடசாலையும் நாமும்




பாடசாலையாலே கல்வி
பலவும் நம்மைச் சேரும்
பீடு பெருமை யாவும் பெருகும்
பேரின்பமான வாழ்வும் வந்து சேரும்.

நாடு உயர வீடு மலர
நல்ல கல்வி வேண்டும்
ஏடு சுமந்து பாடசாலை
ஏகிக் கற்றல் இன்பம்!

தாய்பிள்ளை உறவு பூண்டு
தவமியற்றும் சோலை
தரணியிலே பாடசாலைக்குச்
சமமாய் எதுவும் இல்லை

மண்ணிற் பிறந்த அனைவர் வாழ்வும்
மலரக் கல்வி வேண்டும்
எண்ணெழுத்து அறிவியல்
எல்லாம் கற்று இலங்குவோம்!

## வறியோருடன் அமர்ந்து உணவருந்திய திருத்தந்தை....

வறியோருடன் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் செலவிட்டு, அவர்களோடு உணவருந்தி மகிழ்ச்சியடைந்த திருத்தந்தை பிரான்சிஸ்

மதிய உணவை வறியோருடன் உண்டபின் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, அங்கிருந்த குழந்தைகளையும், வறியோரையும் வாழ்த்திய திருத்தந்தை, இவ்வுணவை தயாரித்த சமையல்காரர்களுடன் புகைப் படம் ஒன்றும் எடுத்துக்கொண்டார்.

அவ்விருந்தில் கலந்துகொண்ட வறியோர் ஒவ்வொருவருக்கும், ஒரு கிலோ பாஸ்தா பொட்டலம் ஒன்றையும் பரிசாக வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## ஏழைக் கைம்பெண், கிறிஸ்தவ வாழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு...

இறைவன், அளவுகளையும், எண்ணிக் கைகளையும் கருதுபவர் அல்ல, மாறாக, தரமான வாழ்வைக் கருது பவர். உள்ளத்தின் சிந்தனைகளை நன்கு அறியும் இறைவன், தூய எண்ணங்களுக்கு முக்கியத்துவம் வழங்குகிறார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்தார். வறுமையில் வாழ்ந்தாலும், தன்னை இறைவனுக்கு முற்றிலும் அர்ப்பணித்த அன்னை மரியா, நம்மையே இறைவனுக்குக் காணிக் கையாக்குவது எப்படி என்பதை சொல்லித்தருவாராக என்ற விண்ணப் பத்துடன், திருத்தந்தை, தன் மூவேளை செப உரையை நிறைவு செய்தார்.



# கிறிஸ்தவம் மாணவர் பக்கம்

## க.பொ.த உயர்தரம்

- நில்மினி கஜேந்திரன் -

### குருத்துவ துறவற வாழ்வு :

திருச்சபையின் வாழ்வின் காலத்தின் தேவைக்கேற்ப ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்த விரும்பிய வத்திக்கான் பொதுச்சங்கம், குருக்களின், துறவிகளின் வாழ்விலும் காலத்திற்கேற்ப மாற்றங்களும், மறுமலர்ச்சியும் ஏற்படுவதை விரும்பியது. இதற்கமைய "திருப்பணியாளர்களின் பணியும், வாழ்வும் பற்றிய விதித் தொகுப்பு", "திருப்பணிப் பயிற்சி பற்றிய விதித் தொகுப்பு" எனும் இரு ஏடுகளையும் "துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய மற்றுமொரு விதித் தொகுப்பு" எனும் ஏட்டையும் வெளியிட்டுள்ளது. முதலிரு விதித் தொகுப்புகளும் எல்லாத் திருப்பணியாளர்களுக்கும், சிறப்பாக மக்களிடையே பணியாற்றும் மறைமாவட்டக் குருக்களுக்கும் பொருந்தும். தகுந்த மாற்றங்களுடன் துறவறத் திருப்பணியாளர்களுக்கும் பொருந்தும் எனக் கூறப்பட்டுள்ளது.

முதல் ஏடானது திருப்பணி நிலை பற்றிய இறையியல் கொள்கையை விளக்குகிறது. திருப்பணியாளர்கள் கிறிஸ்துவுடன் நின்று திருப்பணியைத் தொடர்ந்தாற்று கின்றனர். அவர்களின் வாழ்வு, பணி என்பன கிறிஸ்துவின் மறையுடலாகிய கிறிஸ்தவ சமூகத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவை. உலகினர் நடுவே வாழும் இவர்கள் மனிதர்களின் வாழ்வோடும், வாழ்க்கை நிலையோடும் நெருங்கிய தொடர்புடையவர்கள். இதனால் ஒருவித உலகு சார்ந்த தன்மை இவர்களின் வாழ்விலும், பணியிலும் உள்ளது. அதேவேளை உலகின் மதிப்பீடுகளிலும், உலக வாழ்விலும் மூழ்கிவிடாமல், இவற்றினின்று விலகி நிற்கவும் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். இவர்களின் பணி பற்றிக் குறிப்பிடுகையில் முதலில் போதிக்கும் பணியும், அடுத்து தூய்மைப்படுத்தும் பணியும், இறுதியில் தலைமைப் பணி எனவும் குறிப்பிடப்படுகிறது. நற்செய்தி உண்மைகளை வாழ்க்கைச் சூழ்நிலையோடு இணைத்து விளக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது.

ஆயர்களுக்கும், திருப்பணியாளர்களுக்குமிடையே நெருங்கிய உறவையும், திருப்பணியாளர்கள் மத்தியில் பரஸ்பர உறவையும், திருப்பணியாளர்கள், பொதுநிலையினர்களுக்கிடையே உடன் பிறப்பு உறவையும் வளர்க்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தினை வலியுறுத்துகிறது.

திருப்பணிப் பயிற்சி பற்றிய ஏட்டில் அருட்பணி நோக்கு, கடவுள் மையக் கல்வி, காலத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற பயிற்சி போன்ற மூன்று பகுதிகள் உள்ளன. திருப்பணி மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளில் முற்று முழுவதுமாக அருட்பணி பற்றிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கமைய பாடத்திட்டங்கள், பயிற்சி முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். திருப்பணி பயிற்சியகங்கள் மாணவரை வல்லுநராக உருவாக்குவதை விட அருட்பணியாளர்களாக உருவாக்குவதையே முக்கிய நோக்காகக் கொள்ளவேண்டும். கற்றுத்தரும் பாடங்களும், பயிற்சிகளும், இறைத்திட்டத்தையும் கிறிஸ்துவின் திரு நிகழ்வையும் மையமாகக் கொண்டு திகழ வேண்டும். திருவிவிலியம் இறையியலின் உயிர் நாடியாய் அமைய வேண்டும். திருவிவிலியத்தின் ஒளியில் ஒழுக்க இறையியல், திருச்சபை வரலாறு, திருச்சட்டம் ஆகியன மறுபார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும். பயிற்சியைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு நாடும், தனது சூழல், அனுபவம், தேவைக்கேற்பப் பயிற்சித் திட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதனை இவ்வேடு வலியுறுத்துகிறது. துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய ஏட்டில், துறவற வாழ்வில் மாற்றங்கள் ஏற்படுத்தும்போது, மேல்வரிச் சட்டமாய் ஏற்கப்பட வேண்டிய மூன்று அடிப்படை உண்மைகள் தரப்பட்டுள்ளன. முதலாவது, நற்செய்தி எடுத்துரைக்கும் முறையில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதே துறவற வாழ்வின் அடிப்படை என்பதனை எல்லாச் சபைகளும் மேல்வரிச் சட்டமாய்க் கொண்டிருக்க வேண்டும். இரண்டாவது, சபையை நிறுவியவரின் நோக்கத்தையும், அவர் தோற்றுவித்த தனிப்பட்ட திட்டங்களையும், நல் மரபுகளையும், ஒவ்வொரு சபையும் தன் குடும்பச் சொத்தாகப் பற்றுறுதியோடு ஏற்று, அவற்றைப் போற்றிப் பேண வேண்டும். மூன்றாவது, இன்றைய உலகச் சூழ்நிலைகளைத் துறவிகள் நம்பிக்கை ஒளியில் பகுத்தறிந்து,

திருத்தூது ஆர்வம் கனலாய்ப் பற்றியெறிந்து, அதிக உச்ச முறையில் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும்.

இவைபோன்ற வத்திக்கான் சங்கத்தின் ஏடுகளின் தாக்கத்தினை நம் நாட்டுத் திருப்பணியாளர்களின் பயிற்சியகங்களிலும், துறவற மடங்களிலும் தெளிவாய்க் காணக்கூடியதாயுள்ளது. வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர் குருமடங்களில் அளிக்கப்பட்ட பயிற்சிகள், பாடங்கள் இன்று பாரதூரமான வித்தியாசங் களைக் காட்டுகின்றன. இன்று துறவறத்தினர் பிறமதங்களை கற்கவும், உரையாடவும், உறவாடவும் சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. இவ்வாறாகத் துறவற மடங் களின் வாழ்க்கை முறைக ளும், பணிகளும் காலத்திற் கேற்ப மாறியுள்ளதைக் காணமுடிகிறது. இத்தகைய அனைத்து மாற்றங்களும் வத்திக் கான் சங்கத்தினால் என்றால் அது மிகை யாகாது..



சீரங்கன் என்ற ஒருவன் ஒரு கிராமத்தில் இருந்தான்.
அவனுக்கும் அவனது குடும்பத்தாருக்கும் அந்த கிராமத்தை
சேர்ந்தவருக்கு தீமை செய்வதைத் தவிர வேறு வேலையே
இல்லை. அப்படிப்பட்டி குணமுள்ள சீரங்கன் படுத்த படுக்கை
யாகி சாகும் நிலையில் கிடந்தான். அப்போது அவன் ஊராரை
அழைத்தான். சாகும் தருவாயில் உள்ள அவனிடம் இரக்கம்
கொண்ட ஊராரும் அங்கு கூடினர். அனைவரிடமும் அவன்
அழுது கொண்டே,


"நான் உங்களுக்கு எவ்வளவோ தீமை செய்து விட்டேன்.
என்னை அனைவரும் மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இறந்த
பின்பு நீங்கள் அனைவரும் எனது உடலில் கூரிய ஆயுதங்களால்
தாக்க வேண்டும். பின் அனைவரும் சேர்ந்து தரையில் இழுத்துச்
சென்று பின்பு சிதையில் தீமூட்ட வேண்டும். அப்போதுதான்
எனது ஆத்மா சாந்தியடையும். இது எனது கடைசி ஆசை" என்று
கூறினான்.

அவன் சில நாட்களில் இறந்து போனான். ஊரார் அவனது
விருப்பப்படியே உடலை கூரிய ஆயுதங்களால் தாக்கி கயிறால்
பிணைத்து இழுத்துச் சென்று சுடுகாட்டை அடைந்தனர்.
அப்போது போலீஸ்காரர்கள் வந்து அங்கிருந்த அனைவரையும்
கைது செய்தனர்.

ஊராரும் திகைத்தவாறே விசாரிக்க,
"சீரங்கன் ஊர்காரர்களால் தனது உயிருக்கு ஆபத்து" என்று
புகார் கூறியிருந்தார். அதுபடியே நடந்துவிட்டது.
எனவே உங்களை கைது செய்கிறோம்"
என்றனர் காவலர்கள். ஊரார் வாயடைத்து நின்றனர்.
அதிலிருந்தே **"செத்தும் கெடுத்தான் சீரங்கன்"**
என்ற பழமொழி உருவாகியது என்று கூறப்படுகிறது.



# தலைவனை இழந்த சமூகம்



ஒரு குரங்கு வளர்ப்பவன் குரங்குகளுக்கான உணவு திட்டத்தை குரங்குகளிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

காலையில் மூன்று ரொட்டி, மாலையில் நான்கு ரொட்டி. அப்போழுது மாலை நேரம் என்பதால் எல்லா குரங்குகளும் ஒத்துக்கொண்டன.

சில நாட்கள் போனது. ஒரு நாள் காலை நேரத்தில் எல்லாக் குரங்குகளும் புரட்சி செய்தன. எங்களுக்கு காலையில் மூன்று போதாது என்று.

குரங்கு வளர்ப்பவன் சொன்னான் அப்படியென்றால் காலையில் நான்கு மாலையில் மூன்று.

குரங்குகளுக்கு சந்தோசம் தங்களுடைய புரட்சி வெற்றியடைந்ததாக திருப்தியடைந்தது.

எல்லா குரங்குகளும் ஒத்துக்கொண்டன. குரங்கு வளர்ப்பவன் சிரித்துக்கொண்டான். ஏனென்றால் அவனுக்கு தெரியும் எப்படி இருந்தாலும் மொத்தம் ஏழுதான் என்று.

# தெரிந்துக்கொள்ள தகவல்கள்...

ஆந்தையால் ஒரே நேரத்தில் இரு கண்களாலும் இரு வேறு காட்சிகளைக் காண முடியும்.

பெண் சிலந்திப் பூச்சிகள், ஆண் சிலந்தியுடனான உறவுக்குப் பின் அதைக் கொன்று விடுகின்றன.

மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டால்பினுக்கு உண்டு.


பூனைகள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் தூங்குகின்றன.

நண்டுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சட்டையை [மேல்தோல்] உரிக்கின்றன.

ஒரு பட்டுப்புழுவின் கூட்டில் 32 ஆயிரத்து 500 கெஜம் நூல் இருக்கும்.

கோழி முட்டையின் ஓட்டில் சுவாசிப்பதற்கு எட்டாயிரம் நுண் துளைகள் இருக்கின்றன.

ஒரு சிலந்தி ஒரு மணி நேரத்தில் சுமார் 450 அடி நீளம் கொண்ட வலையைப் பின்னுகிறது.



இதன் அடிப்படைதான் மனிதனின் மனது. இந்த குரங்கு மனங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கிறது. பிறகு புரட்சி செய்து வேறு ஒரு ஆட்சி கொண்டு வருகிறது. ஆனால் நான் சொல்கிறேன், ஆட்சியாளர்கள் மாறலாம் ஆட்சி மாறாது. மொத்தம் ஏழுதான். ஆனால் உங்கள் குரங்கு மனம் ஆட்சி மாற்றம் செய்து கொண்டேயிருக்கும்.

குரங்குகள் ஏமாற்றப்பட்டுக் கொண்டேயிருக்கும். குரங்கு வளர்ப்பவனை ஏமாற்றுவதாக நினைத்துக்கொண்டு.

இன்றைய இலங்கையில் நடைபெறும் அரசியலும் தமிழர் நிலையும் இப்படித்தான்.

- நவா



# உனக்கு இங்கே இடமில்லை!

• ஜே.எச்.இரத்தினராஜா



"உனக்கு இங்கே இடமில்லை" - இதுதான் மனித வரலாறு நம் கடவுளுக்குச் சொன்ன வார்த்தைகள். மிகவும் வேதனையான வார்த்தைகள்.

பாலூட்டி சீராட்டி நாம் உறங்க வேண்டும் என்பதற்காக விழித்திருந்து கடைசிப் பருக்கையை உண்டு வெறும் தண்ணீரைக் குடித்துவிட்டு தூங்கப்போகும் நம் வீட்டு அம்மாக்களை நாம் எளிதாக ஒரு கட்டத்தில் 'நீ எனக்கு வேண்டாம்" என்று சொல்வது எவ்வளவு வேதனை தருமோ அந்த அளவு வேதனையை கடவுள் கண்டிப்பாக அனுபவித்திருக்க வேண்டும்.

**சத்திரத்தில் அவர்களுக்கு இடம் இல்லை.**

இடம் என்பது முக்கியமானதொன்று. நமது வீடு நமக்கு பிடித்திருக்கிறது. நமது அறையும் நமக்குப் பிடித்திருக்கிறது. ஏன்? இடம்தான் நம்மை அடையாளப்படுத்துகின்றது. நமது வீட்டில்தான் நாம் சாதாரணமாக இருக்க முடிகின்றது. ஏன் நம் கையில் வைத்திருக்கும் மொபைல் போன்கூட நம் அறை மாதிரிதான். அந்த அறைக்குள் வர யாருக்குமே அனுமதி கொடுப்பதில்லை.

உனக்கு இங்கே இடமில்லை. இந்த வார்த்தைகளை மேலும் இரு கோணத்தில் பார்த்தால் எனக்கு இங்கே இடமில்லை. அவருக்கு இங்கே இடமில்லை.

'எனக்கு இங்கே இடமில்லை'. - இந்த வார்த்தைகளை நாம் நம் வாழ்வின் இக்கட்டான சூழலில் சொல்லத்தான் செய்கின்றோம். என்னிடம் ஒன்றுமில்லை. எனக்கு அழகில்லை, படிப்பில்லை, உறவுகள் இல்லை. இப்படியெல்லாம் நாம் நினைக்கும்போது நமக்கு நாமே உரிய இடத்தைக் கொடுக்கத் தவறிவிடுகிறோம்.

'உனக்கு இங்கே இடமில்லை' இதுதான் நம்மைச் சுற்றியிருக்கும் – சூழலில் நாம் காண்பது. நாம் நினைப்பதை மற்றவர்கள் செய்யவேண்டும். நாம் சொல்வதை அவர்கள் கேட்க வேண்டும். எம்மோடு ஒத்து வராதவர்களுக்கு இங்கே இடமில்லை.

அவருக்கு இங்கே இடமில்லை – கடவுளுக்கு இங்கே இடமில்லை என்று நாம் சொல்வது நாம் உருவாக்கிக்கொண்ட மதிப்பீடுகள். நாம் வைத்துக்கொண்டிருக்கும் பிற நம்பிக்கைகள் கடவுளின் இடத்தை எடுத்து விடுகின்றன.

நம் உறவுகள்கூட 'உனக்கு இங்கே இடமில்லை' என்று நம்மை உதாசீனப்படுத்தும்போதும் வலிக்கின்றது.

**இயேசுவின் பிறப்பு கூறும் வாழ்க்கைப் படிப்பினை.**

இறைமகன் இயேசுவைத் தன் வயிற்றில் சுமந்து வந்த மரியாளை ஏற்றுக்கொள்ள பெத்லகேம் நகரில் ஒருவருக்கும் மனம் இருக்கவில்லை. மக்கள் தொகை கணக்கெடுப்பதனால் நகரம் நிறைந்து வழிந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அந்த ஊரில் அநாதரவான ஒருவரை ஏற்றுக்கொள்ள எவருக்குமே மனதிருக்கவில்லை என்பதுதான் உண்மை. அன்று இடம் இல்லை என்று அவர்கள் சொன்னதற்கான

உண்மைக் காரணம் சத்திரத்தில் இடம் இல்லாதது அல்ல. மனம் இருந்திருந்தால் அங்கே நிச்சயமாக இடம் இருந்தி ருக்கும். சூசையிடம் அநியாயமாகச் சம்பாதித்த பணம் ஏராளமாக இருந்திருக்குமானால் சத்திரக் காப்பாளர் எப்படி யாவது ஓர் அறையை ஏற்பாடு செய்திருப்பார். ஒரு மடிப்புக் கட்டிலாவது கிடைக்காமல் போயிருக்குமா?

உண்மையான காரணம் அவர்கள் உள்ளத்தில் எளியவர் களுக்கும், பணமில்லாதவர்களுக்கும் இடம் இருக்கவில்லை. இரக்கம் காட்டப்போனால் வியாபாரம் செய்த மாதிரித்தான். ஏரோது மன்னனின் படை வீரர்களுக்கும், செசார் மன்னரின் கணக்கெடுக்கும் அலுவலர்களுக்கும், பாரசீகத்திலிருந்து வந்த குதிரை வியாபாரிகளுக்கும், அரேபியாவிலிருந்து வந்த ஒட்டக தரகர்களுக்கும் அங்கே நிறையவே இடம் இருந்தது. பணப்பைகளை உயர்த்திக் காட்டிக்கொண்டிருந்த அந்த வியாபாரிகளுக்கும், அவர்களது பரிவாரங்களுக்கும் தம் சொந்த அறைகளைக்கூட வாடகைக்கு விட்டிருப் பார்கள் அந்தச் சத்திரக்காரர்கள். அந்த வியாபாரிகளையும், அதிகாரிகளையும் மகிழ்விக்க வந்த ஆடலரசிகளுக்கும் அறைகளை ஒதுக்கிக்கொடுக்க ஆயத்தமாகவே இருந்தார் கள். ஆனால், கன்னி மரியாளுக்கும், உழைத்து உரமேறிய கரங்களுடன் பொதி சுமந்துவந்த சூசைக்கும் இடம் இருக்கவில்லை. மனதில் இடமில்லா காரணத்தால் சரித்திர நாயகனுக்கு சத்திரத்தில் இடமில்லாது போய்விட்டது.

இயேசு இவ்வுலகை எட்டிப் பார்த்தபோது அவருக்கு வரவேற்பு தர ஆயத்தமாயிருந்தவர்கள் ஆடுகளும், மாடுக ளுமே. மோயீசன் காலத்தில் இஸ்ராயேலர் பொற்கன்றுக் குட்டியை வணங்கினதாலோ என்னவோ தொழுவத்திலிருந்த மாடுகளும், கன்றுக் குட்டிகளும் இயேசுவை நோக்கி வணங்கிய வண்ணமாகவிருந்தன.

இறைமகனை வரவேற்க வாசனைத் திரவியங்கள் மணம் பரப்பவில்லை. மாறாக தொழுவத்தின் மந்தைகளின் இயற்கைக் கழிவு மணமே காத்திருந்தது. மாணிக்கத் தொட்டிலும் மரகத அணிகலன்களோ அவருக்குக் காத்தி ருக்கவில்லை. மாறாக வைக்கோலும், புண்ணாக்குமே அவரைத் தாலாட்டின. அவரும் நிச்சயமாக இதனையே விரும்பியிருப்பார்.

இயேசுவின் வருகை அதிகார வர்க்கத்தாருக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்தது. ஏரோது மன்னன் மட்டுமல்ல முழு ஜெருசலமுமே கலங்கிற்று. ஏனென்றால் அவர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் என்பது நிச்சயமே. அதாவது பணம், பதவி, பகட்டு, அதிகாரம் என்னும் பண்புகளால் நிறைந்து வழிந்துகொண்டிருந்த ஓர் உளுத்துப்போன சமூகம் வேற்று நாட்டினர் அங்கே வந்து விசாரிக்கும்வரை தங்கள் திரு நூலை வாசிக்காத வக்கற்ற கூட்டத்தினர். தம் அந்தஸ் துக்கும், பதவிக்கும் தம்மைச் சுற்றி துதிபாடும் கூட்டத் தாரோடு உண்டு குடித்து கொண்டாடிக்கொண்டிருந்த குள்ளநரிக் கூட்டம். தன் இரத்தத்தில் அரைவாசியாவது யூதர் வழிவராத ஏரோதன் தன் கபட நாடகத்தினாலும், உரோமைப் பேரரசுக்கு சாமரம் வீசியதனாலும் பெற்றுக் கொண்டதல்லவா அந்த ஆட்சிப்பீடம். யூதர்களின் மன்னர் தாவீதின் வழிவந்தவர் என்று அறிந்தவுடனே அவன் பதற்றம் அடைந்தது வியப்பல்லவே. பரவாயில்லை, ஏதோ அறியாமை அவர்களை இப்படி ஆடவைத்துவிட்டது எனலாம். ஆனால் இன்று இயேசுவை அறிந்து அவர் பெயரில் விழா கொண்டாடும் நம் நிலைதான் என்ன? இறைமகன் இயேசுவை இறைவாக்கி னர்களிலோ அல்லது நற்செய்தியிலோ எத்தனை பேர் காண்கி றோம். அவர் வருவாரென எத்தனைபேர் ஆவலுடன் காத்தி ருக்கிறோம்.? அவர் வந்து விட்டால் என்ன செய்வது என அஞ்சி நிற்கிறோம். சடங்கு, சம்பிரதாயங்கள் என அலைந்து திரியும் நாம் அவரை உண்மையாகவே நம் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டுள்ளோமா? ஏழை எளியவர் மட்டில் நம் அக்கறை என்ன? சத்திரக்காப்பாளருக்கும், அவன் அடி வருடிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? சத்திரத்தில் இடம் இல்லாது போனதுபோல இயேசுவுக்கு நம் உள்ளத்தி லும் இடம் இல்லாது போயிற்றே. இனிய கிறிஸ்து பிறப்பு திருநாளை கொண்டாட ஆயத்தமாகும் நாம் 'உனக்கு இங்கே இடமில்லை' என்று கூறாது நம் இல்லத்திலும், உள்ளத்திலும் இறைமகன் இயேசுவுக்கு இடம் கொடுக்க முன்வருவோம். ■

"

*தாழ்வான உயிரினங்களிலும், மனிதன் உயர்வானவன் என்றால், தாழ்ந்த உயிரினங் களைத் தின்று மனிதன் உயிர் வாழ்வது என்பது அந்த உயர்வின் நோக்கம் அன்று. உயர்ந்த இனங்கள், தாழ்ந்த இனங்களைப் பாதுகாக்க வேண்டும். மனிதனுக்கு, மனிதன் உதவி செய்துகொள்வதைப் போல, அந்த இரண்டு இனங்களும் தம்மிடையே ஒன்றுக்கொன்று உதவிக்கொள்ள வேண்டும். மனிதன் உண்பது உயிர் வாழ் வதற்கேயன்றி சுக அனுபவத்திற்காக அல்ல.*

— மகாத்மா காந்தி —

## பெறுமதியான பரிசினை வெல்வோம் கிறிஸ்து பிறப்பு விழா சிறப்புப் போட்டி

1) நற்செய்தியின் மகிழ்ச்சி (JOY OF THE GOSPEL) எனும் திருத்தூது மடல் யாரால் எப்போது எழுதப்பட்டது?

........................................................................................................................

2) 2013ம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று திருத்தந்தை பிரான்சிசை கவுரவப்படுத்தியுள்ள உலகப் புகழ் பெற்ற வார இதழின் பெயர் என்ன?

........................................................................................................................

3) திருத்தந்தை பிரான்சிஸிற்கு முன் வாழ்ந்த வேறு இரு திருத்தந்தையர்களுக்கு "சிறந்த மனிதர்" விருது வழங்கப்பட்டது. அவர்கள் யார்?

........................................................................................................................

4) பெந்தகோஸ்தே விழாவில் பேதுருவின் உரைகேட்டு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

........................................................................................................................

5) கி.பி. 64ல் உரோமைப் பேரரசை எரித்துவிட்டு, கிறிஸ்தவர்கள் மேல் பழி போட்டு மகிழ்ச்சியடைந்த பேரரசன் யார்?

........................................................................................................................

6) 265வது திருத்தந்தையாக தெரிந்தெடுக்கப்பட்ட திருத்தந்தையின் பெயர் என்ன? எத்தனையாம் வருடம்?

........................................................................................................................

7) இரண்டாம் வத்திக்கான் சங்கம் எப்போது ஆரம்பித்து எப்போது நிறைவுக்கு வந்தது?

........................................................................................................................

8) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை தொடக்கிவைத்த திருத்தந்தை யார்? அதை நிறைவு செய்த திருத்தந்தையின் பெயர் என்ன?

........................................................................................................................

9) திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலை பேதுரு வளாகத்தில் வைத்து துப்பாக்கியால் சுட்டவரின் பெயர் என்ன? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

........................................................................................................................

10) இயேசுவுக்காக உயிர் துறந்த முதல் மறைசான்றாளர் யார்? எப்படி கொல்லப்பட்டார்?

........................................................................................................................

11) இந்தியாவரை வந்து நற்செய்தி அறிவித்த இயேசுவின் சீடரின் பெயர் என்ன? இவர் எப்படி இறந்து போனார்?

........................................................................................................................

12) இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களுள் இறுதியாக இறந்தவர் யார்? எங்கே மரணத்தைத் தழுவினார்?

........................................................................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

அனுப்பவேண்டிய பங்கு : ..........................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........................................................

முடிவுத் திகதி : 31.12.2018

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி,**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

## வினா விடைப் போட்டி - இல 07

**சரியான விடைகள்**

1. நீதிமொழிகள் 19:21
2. மூன்று
3. 1541ல்
4. 1967ம் ஆண்டில் திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் வெளியிடப்பட்ட "மக்களின் முன்னேற்றம்" என்கிற சுற்றுமடலின்.
5. மார்ஸ்காப்டர்
6. சுதேச நாட்டியம்
7. ஒகஸ்ட் 6, 1984ல்
8. நொச்சிப்பூ - (நீலி)
9. Machi சமூகத் தொடர்பு நிறுவனம்
10. "யூதேய கப்டா" நாணயத்தில் "யூதேயா கைப்பற்றப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:**

**திருமதி. M.A.W. பற்றிக்,**
"ஷாலோம்" அம்பாறை வீதி,
அக்கறைப்பற்று.

**நவீன் ஜெயக்குமார்,**
**53/22, சித்தி விநாயகர் குறுக்கு வீதி,**
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.

**Y. மாக்கிறேற்,**
இல. 48, உடையார் வீதி,
கல்முனை - 2.

### நீதிமொழிகள் 15:1-2

"கனிவான மறுமொழி கடுஞ் சினத்தையும் ஆற்றிவிடும்; கடுஞ்சொல்லோ சினத்தை எழுப்பும்.
ஞானமுள்ளவர்களின் நா அறிவை வழங்கும்; மதிகேடரின் வாயோ மடமையை வெளியிடும்."

## எண்ணிப்பார்க்கையில்...

### கர்மமும், தர்மமும்

கர்மமும், தர்மமும் இரு குழல் துப்பாக்கி!
என்ன, பயன்படுத்தும் தோட்டாவுக்கு ஏற்ப
ஒன்று அன்று வெடிக்கும்!
மற்றது நின்று வெடிக்கும்!
கர்மம் பண்ணுபவர்க்கு அந்த
கர்மமே உடனே வினையாக மாறும்.
அதனால் பழிக்குப் பழி என்பதற்கு
அவசியம் கிடையாது!
ஆறுதலாக அமர்ந்திருந்து
வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்!
நம்மைத் துன்பத்திற்கு ஆளாக்கியவனும்,
நமக்கு இன்னா செய்தானும்
தன்னையே தான் அழித்துக் கொள்வான்.
நம் கண் முன்னே இது நிகழும்!!
இதுபற்றி ஆழ்ந்து எண்ணிப் பார்க்கையில்...
தர்மம் செய்தவனுக்கு கைமேல் பலன்
நம் தர்மத்தைப் பெற்றவன் வாழ்வதுதான்!
செய்தவனுக்குப் பலன்?
தலைமுறை தலைமுறைக்கும்
தொடர்ந்து வரும்! பொறுத்திருந்தும் வரும்!

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

## புதிய நியமனங்கள்

'அசிபா'வின் புதிய மறைமாவட்ட இயக்குநர்:
அருட்தந்தை P. சுகந்தன் அவர்கள்,

செங்கலடி 'மரியாயின் சேனை', கியூரியாவின் ஆன்மீக இயக்குநர் :
அருட்தந்தை B.J. குயின்டஸ் CRS

தவசீலன் ஓர் குடும்பத் தலைவன். மாலா அவனது அன்பு மனைவி ஓர் உத்தம கத்தோலிக்க குடும்பம். அவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும். தவசீலன் ஓர் கூலித் தொழிலாளி. ஒரு தினம் அவன் சுமந்து சென்ற அரிசி மூட்டையுடன் விழுந்துவிட்டான். எழுந்து நடக்க முடியவில்லை. இடுப்பு உடைந்து விட்டது. படுத்த படுக்கையிலேயே எல்லாம் செய்ய வேண்டியிருந்தது. வைத்தியர்களால் கைவிடப்பட்ட நிலையில் முழுக் குடும்பமுமே கஷ்டத்தில் விழுந்தது. மாலா ஒரு வீட்டில் கூலி வேலை செய்ய ஆரம்பித்தாள். அவளது சொற்ப வருமானத்தில் குடும்பம் வாழ்ந்துகொண்டு வந்தது. தவசீலன் படுத்த படுக்கையிலிருந்தான். பல வைத்தியர்களிடம் சென்று காட்டியும் எல்லோரும் கைவிட்டு விட்டனர். முழுக் குடும்பமுமே கண்ணீரோடு செபித்து வந்தனர். தினமும் மாலையில் செபமாலை சொல்லத் தவறமாட்டார்கள்.




அருட்சகோதரி ஜூட்ஸ் F.M.M

கால வெள்ளம் கஷ்டத்தில் கடந்தோடிக்கொண்டிருந்தது. நத்தார் காலம் ஆரம்பித்துவிட்டது. யூடித் பத்தாம் ஆண்டில் கல்வி கற்றுக்கொண்டிருந்தாள். ஒரு நாள் பாடசாலை முடிந்ததும் யூடித் தனது வகுப்பு ஆசிரியையிடம், "மாலையில் எனக்கு ஏதாவது வேலை செய்ய யாரிடமாவது கேட்டுத் தருவீர்களா?" எனத் தன் குடும்ப நிலையைக் கண்ணீரோடு எடுத்துக் கூறினாள். ஆசிரியையும் மனவேதனைப்பட்டாள். தனது வீட்டில் சிறு சிறு வேலைகள் செய்யும்படிக் கூறினாள். யூடித் மகிழ்ச்சியுடன் சென்றாள். வீட்டில் தாயாரிடம், "அம்மா எனக்கு மாலையில் பாடமிருக்கிறது. அதனால், மாலை ஆறு மணிக்குத்தான் வீட்டிற்கு வருவேன்" என கூறிவிட்டு வேலைக்குப் போய் வந்தாள். ஆசிரியைக் கொடுத்த பணத்தைச் சேர்த்து வைத்திருந்தாள். நத்தார் நெருங்கி

# அவன் ஒரு கூலித் தொழிலாளி






**நம்பிக்கையுடன் இருந்தால் ....**

எதிரிகளால் துரத்தப்பட்ட இளைஞன் ஒரு குகைக்குள் ஒளிந்தான். தன்னை எப்படியாவது காப்பாற்றுமாறு கடவுளை வேண்டினான். ஒளிந்த குகையின் வாயிலில் சிலந்தி ஒன்று தோன்றி வலை பின்னத் தொடங்கியது. அடுத்த நாள் காலைக்குள் பெரிய சிலந்தி வலை குகை வாயிலில் உருவாகி இருந்தது. அந்த குகையை எதிரிகள் சூழ்ந்தனர். வாசலில் வலையைப் பார்த்து உள்ளே யாரும் இல்லையென நினைத்து வந்த வழியே சென்றனர். நம்பிக்கையுடன் இருந்தால் நாம் நினைக்காத திசையிலிருந்தும் தீர்வுகள் தேடிவரும்.

**மனதைச் சீர் செய்தால் ....**

'உடலெல்லாம் வலி. எங்கு தொட்டாலும் துடிக்கிறேன்" நோயாளி சொன்னதில் மருத்துவருக்கு ஆச்சரியம். சோதித்தால் நோயின் சுவடே இல்லை. சற்றே உற்றுப் பார்த்ததில் வந்தவரின் சுட்டு விரலில் காயம் இருந்தது. தொட்ட இடமெல்லாம் வலி, சுட்டு விரலில் ஏற்பட்டதை உடலெல்லாம் காயமென நினைத்துக்கொண்டிருந்தார். நம் மனமும் சுட்டு விரல் போலத்தான். அதில் வெறுப்பு, விரக்தி, அவநம்பிக்கை இருந்தால் எல்லா இடங்களிலும் அதுவே இருப்பதாய்த் தோன்றும். மனதை சீர் செய்தால் மற்றவையும் சீராகும்.

- ஜே.பெ.இரத்தினராஜா -

வந்தபோது ஆசிரியை தன் கணவனிடம் யூடித்தின் நிலைமையை கலந்தாலோசித்தாள். உண்மையான நத்தார் உதவியற்றோரை மகிழ்ச்சிப்படுத்துவது. இருவரும் அவர்களுக்கு உதவிசெய்யத் திட்டமிட்டனர்.

அவர்களின் வீட்டிற்குச் சென்று உண்மை நிலையை அறிந்துகொண்டனர். நத்தாருக்கு 5 நாட்களின் முன்பு யூடித்தையும் அவர்களின் சகோதரங்களையும் கடைக்கு அழைத்துச் சென்று தேவையான ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள் எல்லாம் வாங்கிக்கொடுத்தனர். அவர்களின் தாயாருக்கும், தகப்பனாருக்கும் கூட உடுப்புகள், சமையலுக்கான உணவுப் பொருட்கள் எல்லாம் வாங்கிவந்து கொடுத்தனர். அது அக்குடும்பத்திற்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது.

அதன்பின் ஆசிரியை சுசிலாவின் கணவர் கூறினார், "நத்தார் முடிந்ததும் உங்கள் அப்பாவை ஒரு நல்ல வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று நோயைக் குணமாற்றுவோம். அதற்குரிய பணத்தை நாங்கள் செலவிடுவோம்" எனக் கூறினர். தவசீலன், மாலா இருவரும் எப்படி நன்றி கூறுவதென்றே தெரியாமல் திண்டாடினர். இறுதியாக அன்னை மரியின் படத்தின் முன் நின்று "இவதான் உங்கள் மூலம் எமக்கு இந்தப் பெரிய உதவி செய்யக் காரணம்" எனக் கூறி மாதாவிற்குத் துதி பாடிச் சென்றனர்.

உண்மையான நத்தார் இதுதான். இல்லாதவர்களோடு சேர்ந்து உதவி செய்து பகிர்ந்து கொண்டாடுவதாகும்.

கால வெள்ளம் கடந்ததும் தவசீலன் ஆசிரியை செய்த உதவியால் பூரண குணமடைந்து நல்லதொரு தொழில் செய்யும் வாய்ப்பையும் இறைவன் கொடுத்தார். ■




ஐநாவின் அரங்கினிலும் முழக்கம்
அருந்தமிழர் வாழ்விற்துயர் கலக்கம்
மெய்யாக மக்கள் நலன்
வேண்டுபவர் ஒன்றிணைந்தால்
உயர்வடைந்து உலகில் நலம் செழிக்கும்!



# பெறுமதி தெரிந்தால் புதைக்கமாட்டீர்கள்

பிரேசிலின் மிகப்பெரும் கோடீஸ்வரர் தனக்கு சொந்தமான பத்து இலட்சம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள பெண்ட்லே சொகுசுக் காரைப் புதைக்க விரும்புவதாக விளம்பரப்படுத்தினார். அதற்கு அவர் சொன்ன காரணம் இறப்புக்கு பின்னர் இந்த கார் பயன்படும் என்பதாகும்.

இதைக்கேட்ட பத்திரிக்கைகள் விமர்சனம் செய்தன. "பைத்தியக்காரன் பத்து இலட்சம் டொலரை வீணடிக்கிறானே முட்டாள்" என்றெல்லாம் திட்டி எழுதினார்கள். பொதுமக்கள் திட்டித் தீர்த்தார்கள்.


புதைப்பதாக சொன்ன தேதியும் வந்தது எல்லோரும் ஆவலாக என்னதான் நடக்கிறது என்று பார்க்கக் கூடினர். பெண்ட்லே காரை புதைக்கும் அளவுக்கு பெரிய பள்ளம் வெட்டப்பட்டு புத்தம் புதிய அந்த காரும் நிறுத்தப் பட்டிருந்தது. எல்லோரும் பொறுமையாகப் பார்த்துகொண்டிருந்தனர். பணக்காரர் வந்தார். காரைப் புதைக்கும் ஏற்பாடுகள் தொடங்கின. சிலர் நேரிலேயே அவரின் பைத்தியக்காரத்தனத்தைத் திட்டித் தீர்த்தனர்.

"விலை உயர்ந்த பொருளை இப்படி வீணடிக்கிறீர்களே இது எப்படி உங்கள் மரணத்திற்கு பிறகு பயன்படும் அதற்கு பதில் யாருக்காவது தானமாகக் கொடுத்தால் அவர்களுக்காவது பயன்படுமே" என்று கோபத்துடன் கேட்டனர்.

திடீரென அந்த பணக்காரர், "நான் காரை புதைக்கவில்லை. யாராவது அந்த முட்டாள் தனத்தைச் செய்வார்களா? உங்கள் எல்லோருக்கும் ஒரு உண்மையை உணர்த்தவே இப்படி வித்தியாசமாக விளம்பரப்படுத்தினேன்" என்றார் .

"என்ன உண்மை" என்றனர் அனைவரும். "இந்த கார் பத்து இலட்சம் யூஎஸ் டொலர்தான். இதை புதைக்கிறேன் என்றவுடன் கோபப்பட்டு கேள்வி கேட்கிறீர்களே, நான் உங்களை ஒன்று கேட்கிறேன், இதைவிட விலை மதிப்பில்லாதது மனித உடல் உறுப்புகள். இதயம், கண், நுரையீரல், கிட்னி, தோல் என மனித குலத்துக்கு பயன்படும் மதிப்புமிக்க உடல் உறுப்புகளை புதைப்பதால் என்ன இலாபம்? யாருக்காவது தானமாக தரலாமே... இலட்சக்கணக்கானவர்கள் உடல் உறுப்பு தானத்தை நம்பி வாழ்கிறார்கள். அவர்களுக்கு உங்கள் உடல் உறுப்புகள் பயன்படட்டுமே உடலுறுப்பு தானம் செய்யுங்கள். இதை உணர்த்தவே இந்த நாடகம்" என்றாராம்.

## திருத்தந்தை - இயேசுவை சாலையில் சந்தியுங்கள்...



எம்மாவுஸ் சென்ற இரு சீடர்களுக்கு இயேசு காட்சியளித்தபோது, அவர்களோடு நடந்து, அவர்கள் பேசுவதைக் கேட்டு, அவர்கள் உள்ளத்திலிருந்த நம்பிக்கை, மற்றும் ஏமாற்றத்தை வெளிக்கொணரச் செய்து, அவர்களை மறைப்பணிக்கு அனுப்பினார் என்றுரைத்த திருத்தந்தை, இயேசு செவிமடுக்கிறார், அவரோடு நடக்கின்றேன், அவர் பேசுவதைக் கேட்கிறேன், பின்னர், தெளிந்து தேர்வு செய்கிறேன் ஆகிய நான்கு கூறுகளை விளக்க விரும்புவதாக, அக்குருத்துவ மாணவர்களிடம் தெரிவித்தார்.

குருத்துவ பயிற்சியில், ஆண்டவர் பேசுவதைக் கேட்பதும், அவரிடம் பேசுவதும் முதலிடத்தில் இருக்க வேண்டும் என்று கூறியத் திருத்தந்தை, குருத்துவ கல்லூரி, அழைத்தலை, தெளிந்து தேர்தலின் இடம் எனவும் எடுத்துரைத்தார்.

- வத்திக்கான் செய்திகள் -






- ஆழியோன் -

இலங்கை அரசியலின் அண்மைக் காலப் போக்குகள் மிகவும் வித்தியாசமாகக் காணப்படுகின்றன. சுதந்திர இலங்கையின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பாராளுமன்ற நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. அரசியலமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் ஆர்வலர்கட்கும், மாணவர்களுக்கும் ஆராய்வு தொடர்பாகப் பயனுள்ளவையாக காணப்படுகின்றன. ஆனால், உயர் சபைக்குள் நடந்தேறும் சம்பவங்கள் வெட்கம், துக்கம், அச்சம் நிறைந்தவையாகத்தான் காணப்படுகின்றன. உயர் சபைக்குள் உள்ளவர்களின் மேல் இருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையும் பறி போய்விட்டது.

தந்தை செல்வா, டி.எஸ். டட்லி, பண்டார நாயக்க, என். எம். பெரேரா, அமிர் அண்ணா.... போன்ற கனவான்கள் அலங்கரித்த சபையது. இப்போது அநாகரீகமாகிவிட்டது.

அண்மையில் டெல்லி முதலமைச்சரின் மீது மிளகாய்த்தூள் தண்ணீர் ஊற்றப்பட்டது. இது தொடர்பாக எழுதிய இந்தியப் பத்திரிகைகள் - 'இலங்கைப் பாணியில்' மிளகாய்த் திரவம் வீசப்பட்டது என்றே எழுதின. இச்சம்பவங்கள் இன்று எமக்குத் தாக்கமாகப் புரிகின்றன. ஆனால், இன்னும் கொஞ்ச காலம் செல்ல அப்படியே இது மறந்து விடும். வருங்கால சமூகம் இதை யறிந்துகொள்ள இவ்விடயங்கள் ஆவணப் படுத்தப்படல் வேண்டும். இல்லாவிடில், "அரசிய லில் இது சகஜமப்பா...." என்றவாறு போய்விடும்.

அகிலன், கல்கி, சாண்டில்யன் ... போன்ற எழுத்தாளர்கள் சரித்திரக் கதைகளைப் பாகம் பாகமாக எழுதினார்கள். அவற்றை வாசிக்கும் அரண்மனைகள், அங்காடிகள், போர்களங்கள், போர்க் கலங்கள், யுத்த வியூகங்கள், உளவுத்துறை திறமைகள் என்பனவற்றை நமது மனக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள். காதலையும் தான்....!

யுத்தகளத்தில் எதிரியின் படைகள் சர்ப்பம் போல் சுற்றி வளைத்தால், கருட வியூகம் மூலம் அப்படைகள் சிதறடிக்கப்படும். அதாவது சர்ப்ப வியூகத்தை முறியடிக்க கருட வியூகம் பிரயோகிக்கப்படும். "கடல் புறா"வில் இவற்றை இரசித்து வாசித்தமையால் "பாகுபலி" பார்த்தபோது இலகுவாக விளங்கிக் கொள்ளவும், இரசிக்கக் கூடியதாகவும் இருந்தது.

நல்ல கதைகளாக, நல்ல நாவல்களாக, நல்ல திரைக் காவியங்களாக, நல்ல ஓவியங்களாகக்கூட இன்றைய நிலைகள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

இங்கு இன்னொரு விடயமும் கவனிக்கப்படல் வேண்டும். உயர்சபையில் மோதுகின்றார்கள்; பத்திரிகையாளர் மாநாடுகளில் எகிறிக் குதிக்கின்றார்கள்; ஆனால் திரை மறைவில் ஒன்றாக உண்கிறார்கள்;

19ம் பக்...




ஜெருசலேமை ஒட்டோமான்களிடமிருந்து ஜெனரல் அட்டென்பி பொறுப்பெடுத்தபோது, சுற்றயல்களதும் சமூகங்களதும் ஒட்டு வேலை போன்று புதிய நகரம் தென்பட்டது. ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான குணாதிசயங்களைக் கொண்டிருந்தன. இந்த நிலைமை பிரிட்டிஷாரின் ஆட்சியிலும் நீடித்தது. புதிய நகரமானது பழைய நகர மதில்களைத் தாண்டி வியாபித்தபோது, ஜெருசலேமின் பழைய நகரம் வளங் குன்றிய பழைய அயல் போன்று படிப்படியாக உருமாற்றம் பெற்றது. நகரததின் முதலாவது இராணுவ ஆளுநரான ரொனால்ட் சோர்ஸ் பிரபு, ஒரு நகர் திட்ட கட்டளையைப் பிறப்பித்தார். அதன்படி புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்போது, வளர்ந்து கொண்டு வருகின்ற நிலையில் நகரத்தின் ஒட்டு மொத்த தோற்றத்தை பேணுவதற்காக கற்கள் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்றிருந்தது. 1930களில் இரண்டு முக்கிய அமைப்புக்களான 'ஹடாசா மெடிக்கல் சென்றர்' மற்றும் 'ஹீப்ரு பல்கலைக்கழகம் ஜெருசலேமின்' ஆகியன ஸ்கோப்பஸ் மலையில் அமைக்கப்பட்டன.

பிரிட்டிஷ் ஆட்சி அமைதியின்மை வளர்ந்து கொண்டு போன கால கட்டமாக இருந்தது. பிரிட்டிஷாரின் ஆட்சிக்கெதிரான அரபுக்களின் ஆத்திரம் மற்றும் யூத குடிவரவுகள் (1948 அளவில் பலஸ்தீனத்தின் ஒவ்வொரு ஆறில் ஒரு யூதர் ஜெருசலேமில் வாழ்ந்தனர்) இவையெல்லாம் சேர்ந்து யூதர்க்கெதிரான கலவரமாக வெடித்தது. 1920, 1929 மற்றும் 1930களில் ஏற்பட்ட இந்தக் கலவரங்களால் குறிப்பிடத்தக்க அளவு அழிவும், பல உயிரக் காவுகளும் இடம்பெற்றன. யூத சமூகமானது இத்தகைய கலவரங்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள, 1920 ஏப்ரில் மாதம் ஜெருசலேம் இன வன்முறையை அடுத்து சுய-பாதுகாப்புப் படையை உருவாக்கியது. பின்னாட்களில் இடம்பெற்ற குழப்பங்களின்போது யூதர்கள் குண்டு வீச்சு மற்றும் தாக்குதல்களை, பிரிட்டிஷார் விசேடமாக, அரபுக்களோடு ஒத்துழைப்பதாக சந்தேகித்த போதும், 1939 வெள்ளை அறிக்கை மூலம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது யூத குடியேற்றங்களை கட்டுப்படுத்த முயன்றபோதும், பிரிட்டிஷாருக்கெதிராக மேற்கொண்டனர். இத்தகைய தாக்குதல்கள் 1930 களிலும் 1940 களிலும் பரவவே செய்தன. 1946 இல் சியோனிஸ்ட் பாதாள உலகக் குழு 'இர்குன்' குழு அங்கத்தவர்கள் பிரிட்டிஷ் படையணி தங்கியிருந்த தாவீது அரசர் ஹோட்டலைப் பகுதியாக குண்டு வைத்துத் தகர்த்தனர். இந்தச் செயலின் விளைவால் 91 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

1947 நவம்பர் மாதம் 29 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பாலஸ்தீனத்தில் இருந்த பிரிட்டிஷ் அரசை பிரிக்கத் தக்கதாக ஒரு திட்டததை அங்கீகரித்தது. யூதர்களுக்கு ஒன்றும், அரபுக்களுக்கொன்றுமாக தனித் தனி அரசுகளை பிரித்து வழங்குவதே அந்தத் திட்டம். ஒவ்வொரு நாடும் மும்மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டிருக்கும். அவை பிரதேச எல்லைகளுக்கு அப்பால் பாதைகளால் ஒன்றிணைக்கப்பட்டிருக்கும் என்பதோடு அரபுக்களுக்கு ஜாஃபாவில் தனி ஒதுக்கம் அமையும் என்பதே அதன் சாராம்சம். அது தவிரவும் விசாலிக்கப்பட்ட ஜெருசலேம் சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் தனி நகரமாக இருக்கும்.

### ஜோர்தானுக்கும், இஸ்ரேலுக்குமிடையில் பிரிவு

இந்தப் பரிவினைக்குப் பிறகு ஜெருசலேமுக்கான போராட்டம் அதிகமாகியது. பேராட்டக்காரர்கள், பொது மக்கள் என்று பிரிட்டிஷார், யூதர்கள், அரபுக்கள் மத்தியில் பலத்த அழிவுகள் ஏற்பட்டன. 1948 மார்ச் மாத இறுதியில், பிரிட்டிஷார் வெளியேறிய கால கட்டத்தில், இந்த பிரச்சினையில் தலையிட பிரிட்டிஷ் அரசு அடுத்தடுத்து தீர்மானங்கள் எடுத்து வந்த நிலையில், ஜெருசலேமுக்கான பாதை அரபு ஆயுத தாரிகளால் மூடப்பட்டது.

படிப்படியாக இந்த முற்றுகையானது இரு பக்க அழிவுகளுடன் முடிவுக்கு வரவே செய்தது. 1948 அரபு – இஸ்ராயல் யுத்தத்திற்கு முன்னர் 1948 மார்ச் மாதம் பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவுடன் இது நிகழ்ந்தது.

1949 அரபு – இஸ்ராயல் யுத்தமானது அரபுக்களதும், யூதர்களதும் இடப்பெயர்வுக்கு காலாயிற்று. பென்னி மொரிஸ் என்பவரது கூற்றுப்படி இரண்டு பக்கங்களிலுமிருந்த ஆயுததாரிகள் மற்றும் கும்பல்களின் வன் முறைகளால் அதிகமாக ஓர்த்தோடெக்ஸ் யூதர்களில் 1500 முதல் 3500 பேர் வரை மேற்கு ஜெருசலேமுக்கு பழைய நகரிலிருந்து ஒரு தொகுதியாக இடம் பெயர்ந்தனர். ஒப்பீட்டடிப்படையில் பிரபல்யமான அரபு கிராமமான லிப்டா எனும் ஊர்(இன்று ஜெருசலேம் எல்லைக்குள் அமைந்திருப்பது) இஸ்ராயலர்களால் 1948 இல் கைப்பற்றப்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் 'ட்ரக்' வண்டிகளில் ஏற்றப்பட்டு கிழக்கு ஜெருசலேமுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். டெயிர் யாசின் மற்றும் ஜெருசலேமின் அயல்களான கட்டமொன். புக்கா, மமில்லா மற்றும் அபு தோர் போன்றவையும் இஸ்ராயலின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. அங்கெல்லாம் இருந்த மக்கள் பலாத்காரமாக இடம் பெயர்க்கப்பட்டனர். சில சந்தர்ப்பங்களில் இஸ்ராயல் மற்றும் பாலஸ்தீன சரித்திரவியலாளர்கள் பென்னி மொரிஸ் மற்றும் வாலிட் காலிடி ஆகியோர் ஆவணப்படுத்தியுள்ளது போல வெளியேற்றுகையும், படுகொலைகளும் நடந்தேறின.

1948 மே மாதம் அமெரிக்க அரச பிரதிநிதி தொடஸ் சீ. வஸ்ஸன் வை.எம்.சீ.ஏ, கட்டிடத்தின் முன் வைத்து கொலை செய்யப்பட்டார். நான்கு மாதங்கள் கழித்து, ஐக்கிய நாடுகள் சபை தூதுவரான கவுன்ட் பேர்னடொட் ஜெருசலேமின் கட்டமொன் மாவட்டத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இதை யூத குழுவொன்றே செய்தது.

**ஜோர்தானுக்கும் இஸ்ராயேலுக்குமிடையில் பிரிவு (1948 – 1967) :**

1947 இல் ஐக்கிய நாடுகள் திட்டத்திற்கமைய பாலஸ்தீனம் பிரிக்கப்படவும், ஜெருசலேம் சர்தேச நிருவாகமொன்றின் கீழ் வரவும் திட்டம் ஒன்றை முன்மொழிந்தது. நகரமானது முற்றாக அரபு நாடுகளால் சூழப்படவும், சர்வதேச கட்டுப்பாட்டு ஜெருசலேம் ஒரேயொரு நெடுஞ்சாலையால் யூத நாட்டுடன் தொடர்புபடுத்தப்படவும் அதில் ஏற்பாடு இருந்தது.

1948 அரபு – இஸ்ராயல் யுத்தத்தின் பின்னர், ஜெருசலேம் பிரிக்கப்பட்டது. நகரத்தின் மேற்கு காற்பகுதி புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ராயல் நாட்டுக்கும், கிழக்குப் பகுதி பழைய நகரத்துடன் சேர்த்து ஜோர்தான் நாட்டினால் ஆளப்படவும் வழி உருவாகியது.

யூத புனித தலங்களைப் பொறுத்தவரை, ஒரு குழுவை அமைத்து பல விடயங்கள் குறித்தும் ஆராய்வதோடு, அதனுடைய ஆட்சியின் கீழமையும் புனித இடங்களுக்கு பிரதானமாக மேற்கு அழுஞ் சுவர் மற்றும் ஒலிவ மலையில் இருக்கும் அவர்களின் மயான பூமிக்கு யூதர்களின் பகுதியிலிருந்து சென்று வர சுலபமான வழி செய்ய வேண்டும் என்று 1949 ஏப்ரில் மாதம் 3 ஆம் திகதி இஸ்ராயலுக்கும், ஜோர்தானுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 8.2 பிரிவின்படி ஜோர்தானுக்கிருந்த கடப்பாட்டை அது மீறியது. ஜோர்தான், மயானத்தில் புதிய பாதைகள் அமைக்க அனுமதி அளித்தும், புதைகுழிக் கற்களைப் பயன்படுத்தி தனது இராணுவ முகாமுக்கு தரையில் பரவவும் இடம் வைத்தும் செயற்பட்டது. நீதிமானான ஷிமோனின் குகை ஒரு குதிரை லாயமாக மாறியது.

அதுமட்டுமல்ல ஜெரால்ட் எம். ஸ்டெய்ன்போர்க் என்பவரின் குறிப்பின்படி ஜோர்தான் பழைய நகரில் 57 புராதன செபக் கூடங்கள், வாசிகசாலைகள், மத பாடசாலைகளைச் சூறையாடியது. இதில் 12 அமைப்புக்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டன. அதையும் தாண்டி நின்றவைகளின் முகப்புக்கள் சேதமாக்கப்பட்டன. அத்துடன் அவை மக்களும், மிருகங்களும தங்குமிடமாக்கப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபைக்கும், சர்வதேச சமூகத்திற்கும் இத்தகைய அழிவான அநியாயங்களைத் தடுத்து நிறுத்தவும், பழைய நகரத்தை திறந்த நகரமாக பிரகடனம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பல தடவைகள் விண்ணப்பங்கள் செய்யப்பட்டன. ஆனாலும் பிரதிபலன் இருக்கவில்லை.

1950 ஜனவரி 23 அந் திகதியன்று க்நெசற் (Knesset) அமைப்பு ஜெருசலேம் இஸ்ராயலின் தலை நகரம் என்றும், அதுவே நாட்டின் மிகப் பெரிய நகரம் என்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ■

இலக்கிய மஞ்சரி ...

தேநீர் குடிக்கின்றார்கள். அதாவது, எம்மை முட்டாளாக்கி விடுகின்றார்கள். எமக்கு என்றும், எப்பொழுதும் ஏப்ரில் ஒன்றாம் திகதிதான்.

நாணயத்திற்காக நாணயமின்றி கூடுபாய்பவர்கள் இருக்குமட்டும் எமக்கு நாணம்தான். வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்திலும் எட்டப்பன் இருந்ததை வரலாறு சொல்லித் தருகிறது தான்.!



அருட்பணி **அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

# அன்பினால் அரவணைக்கும் ஆன்மீகம்



**ஆ**லயம், கோயி(வி)ல், மசூதி, விகாரை இவை யாவும் இலங்கை வாழ் பல்லின சமய மக்களின் வழிபாட்டுத் தலங்களாகும். தமிழில் மிகவும் அழகாக "கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் நமது வழிபாட்டு மையங்கள் குறித்து உயர்வாக கூறப் பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆசிய பண்பாடு மற்றும் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்ததாக ஆலயமும், வழிபாடும் மாறிவிட்டமை தவிர்க்க முடியாத உண்மையாகும். ஆலயமும் அது சார்ந்த வழிபாடும் நம்மை இறைவனோடு ஒன்றிக்க செய்வதுடன், சக மனிதரோடு (அவர்கள் எத்தகைய நம்பிக்கை நெறியினை பின்பற்றுவர்களாக இருந்தாலும்கூட) நல்லுறவிலும் வாழச் சொல்லித் தரவேண்டும். ஆயினும் இன்று உலகில் நடைபெறுகின்ற பெரும்பாலான கலவரங்களும், வன்முறைகளும் சமயம் சார்ந்ததாகவோ, சமயத்தின் பெயராலோ நடைபெறுவதாகவே காணப்படுகின்றது. அத்தகைய செயற்பாடுகள் உண்மை ஆன்மீகத்தில் ஈடுபட்டுள்ளவரைக் கலக்கமுறச் செய்கின்றன. மறு பக்கத்தில், மதம்சார் அடிப்படைவாத சிந்தனைகளால் தூண்டப்படுவோருக்கு மகிழ்வினையும் தருகின்றன என்பது வேதனையுடன் நோக்கப்பட வேண்டிய உண்மையாகும்.

என்னை அதிகம் கவர்ந்ததும், நான் அதிகம் சிந்தித்ததும், பலவேளைகளில், பலவிடங்களில் என்னால் பகிரப்பட்டமான ஒரு சிந்தனைக்கான கதையினை முன்வைக்கிறேன்.

**பு**றாக்கள் கூட்டம். சிவன் கோயில் மாடங்களில் மகிழ்ச்சியாய் வாழ்ந்தன. குடமுழுக்கு விழா வந்தது. கோயிலுக்கு வெள்ளை அடிக்க ஆரம்பித்தனர். பாவம் புறாக் கூட்டம்..! பக்கத்திலிருந்த மாதா கோயிலுக்குப் பறந்தன. நிம்மதியாக வாழ்ந்து வந்தன. கிறிஸ்மஸ் வந்தது. கோயிலுக்கு வெள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். பாவம் புறாக் கூட்டம்..! பக்கத்திலிருந்த மசூதிக்குப் பறந்தன. உற்சாகமாய் வாழ்ந்து வந்தன. ரம்சான் வந்தது. மசூதிக்கு வெள்ளையடிக்க ஆரம்பித்தார்கள். பாவம் புறாக் கூட்டம்..! மீண்டும் சிவன் கோயில் மாடங்களுக்குத் திரும்பின. நிம்மதியாய் வாழ ஆரம்பித்தன.

ஒருநாள் அதிகாலை... ஊரெங்கும் ஒரே புரளி. யாரோ யாரையோ வெட்டி விட்டார்களாம். தெருக் கலவரம் ஊர்க் கலவரமானது. ஊர்க் கலவரம் மதக் கலவரமானது. அதில் இரத்த ஆறு ஓடியது. மாடப் புறாக்கள் தலையை மெல்ல வெளியே நீட்டிப் பார்த்தன. ஒரு புறாக் குஞ்சு தாயிடம் கேட்டது,

"அம்மா... என்ன இது? ஏன் இப்படி ஒருவரையொருவர் வெட்டிக்கொள்கிறார்கள்?".

"மனிதர்களுக்கு மதம் பிடித்துவிட்டது."

"மதம் பிடித்துவிட்டதா? சரி, நமக்கு ஏன் அப்படி ஏதும் பிடிக்கவில்லை?" "நாம் எந்தக் கோயிலில் வாழ்ந்தாலும் நமக்கு பெயர் புறா தான். ஆனால் அவர்கள், சிவன் கோயிலில் வாழ்ந்தால் இந்துக்கள். கிறிஸ்தவ ஆலயத்தில் வாழ்ந்தால் கிறிஸ்தவர்கள். மசூதியில் வாழ்ந்தால் முஸ்லீம்கள். அப்படித்தான் ஆகிவிடுகிறார்கள், அடித்துக் கொள்கிறார்கள்...!" குஞ்சு கேட்டது: "நாம் அப்படி அடித்துக் கொள்வதில்லையே! அப்படியென்றால் நாம் எவ்வளவோ நல்லவர்கள் தானே..?" அடக்கத்துடன் சொன்னது தாய்ப் புறா: "ஆமாம். அதனால்தான் நாம் எப்பொழுதும் உயர்ந்த இடத்தில் வாழ்கிறோம்" சற்று மிகைப் படுத்தப்பட்டாலும் உண்மை இல்லாமல் இல்லை.

இன்று பலருடைய உள்ளமாகிய ஆலயங் கள், கோயில்கள் மாசுக்களால் நிறைக்கப்பட்டு அதன் புனிதத்துவத்தை இழந்து விட்டதை வேதனையுடன் நோக்க வேண்டியுள்ளது. இத்தகைய பின்னணியில் நமது மூலங்களுக்கு (அடிப்படைகளுக்கு) மீளவும் சென்று எம்மையே சரிசெய்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட் டுள்ளது. விவிலியப் புத்தகம் பவுலடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நீங்கள் கடவுளுடைய கோயில் என்றும் கடவுளின் ஆவியார் உங்களில் குடியிருக்கிறார் என்றும் உங்களுக்குத் தெரியாதா? ஒருவர் கடவுளின் கோயிலை அழித்தால் கடவுள் அவரை அழித்து விடுவார். ஏனெனில் கடவுளின் கோயில் தூயது. நீங்களே அக்கோயில்" (1 கொரி. 3:16-17). அதனை இன்னுமொரு வகையில் நோக்கு கையில் திருமூலர் திருமந்திரத்தில் பின்வருமாறு பாடுகிறார்:

**உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானர்க்கு வாய்கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே.**

எப்போது மனிதர்கள் தாம் இறைவன் வாழும் ஆலயம், கோயில் என்று உணரத் தொடங்கு கின்றார்களோ அன்றுதான் வாழ்வில் மாறுதலைக் காண முடியும். அப்போதுதான் எல்லைகளைக் கடந்து வான்வெளியில் யாசிக்க முடியும்.

மேற்சொன்ன கருத்தினை இன்னும் வலியு றுத்தும் வண்ணம் நோக்குகையில் சித்தர் பாடல்களில் சிவவாக்கிய சித்தர் பின்வருமாறு பாடுகிறார்:

**கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?**
**கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே**
**கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே**

திருவிவிலியத்தில் மீண்டும் பவுலடிகளார் "உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோயில் என்று தெரியாதா" (1கொரி. 6:19) என கேள்வி எழுப்புகின்றார். இதனையே தாயுமானவர் சுவாமிகள் தனது பாடலில் பின்வருமாறு பாடு கிறார்:

**"நெஞ்சமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே**
**மஞ்சனநீர், பூசைகொள்ள வாராய் பராபரமே"**


உள்ளமாகிய கோயிலை மாசுபடாமல், தூ சுக்களால் படிந்து விடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் தேவையும் இன்று அதிகமாக உள்ளது.

எனவே இன்றையத் தேவையெல்லாம் ஒன்று தான். மனிதர்கள் தங்களைத் தாங்களே இறைவன் வாழும் இல்லிடங்களாகக் காண வேண்டும். தமது உடல், உள்ளம், ஆன்மா, ஆவி அனைத்தும் இறைவனின் பிரசன்ன வடிவங்கள் என்கின்ற நிலையினை உணர வேண்டும். அவர்களது வழி பாடுகள் மனிதநேயத்தின் பால் இட்டுச்செல்ல வேண்டும். அவ்வாறு உணர்கின்றபோது, செயல்படுகின்றபோது எல்லைகளைக் கடந்த மனிதநேயம் மானிட மனங்களில் மலரும். மதங் களைக் கடந்த மானிடம் கனியும்.

மதத்திற்குள் மதம் உண்டென்பதனை மனத் தில் இருத்துவோம். ஆனால் மறுபக்கத்தில் சமயத்திற்குள் புதுப்படையல் உண்டதென்பனை மனதார நம்புவோம். இன்றைய பல்லின உலகியல் வாழ்வுக்கு தேவை, ஆளுக்கு ஆள் அடித்துக்கொள்ளும் மதவாதம் அல்ல மாறாக புதுப்படையலை உருவாக்கும் சமயவாதமே. மனிதரை மனிதரை வெறுத்து ஒதுக்கும் அடிப்ப டைவாதம் அல்ல மாறாக அன்பினால் அனைவ ரையும் அரவணைக்கும் ஆன்மீகவாதமே.

**மீண்டும் மற்றுமொரு சிந்தனையுடன்...**

# நத்தாரில் நற்சிந்தை பிறந்திடட்டும்!




மண்ணகம் மலர்ச்சி கொண்டிடவே,
மார்கழித் திங்களின் மடியினிலே,
விண்ணக பாலன் உதித்தனனே!
வியன்களி கூர்ந்தனர் ஞானியரே!

கன்னி ஒருத்தி அன்னையான விந்தையது....!
கயமை போக்க இறங்கிவந்த தேவ மின்னலது...!
மன்னிப்பின் மறையாகத் தேடிவந்த செல்வமது...!
மண்ணுலகை ரட்சிக்கவென்று புறப்பட்டு வந்த
புரட்சிப் பூவது...!

மாட்டுத் தொழுவமே பாலகனின் மாளிகையாம்!
மழையின் பொழிவே அன்னவனின் தாலாட்டாம்!
மாட்சிமையின் போலிக்கு மயங்காத சத்தியமாம்!
மானுடத்துவத்தின் பவவினை நீக்கிடும் நித்தியனாம்!

தேவமைந்தன் பிறப்பின் செய்தி தெளிந்தோமா?
தேவ கட்டளை தன்னைத்தானும் அறிந்தோமா?
பாவச் சேற்றின் சிறையில் இன்னும் உழல்கின்றோம்!
பாரில் நாமும் போலி வாழ்க்கை வாழ்கின்றோம்!

வாழ்த்தட்டை, வண்ணப்பூச்சு, அலங்காரம்,
வகையான தின் பண்டம், ஆடம்பர முத்தாரம்
தாழ்மையின் சின்னங்கள் இவைதானா...?
தருணத்தில் ஒரு கணம் நினைந்திடுவோம்!

அலர்ந்திடும் இந்த நத்தாரில் என்றாலும்
அமைதியின் பாலகன் நம் மனங்களில் பிறக்கட்டும்
புலர்ந்திடும் புதிய மானுடராய் நம் சிந்தை
புனிதமதன் பூங்காவியத்தை வரைந்திடட்டும்!

S. சசீதரன்

இத்தாலிய கத்தோலிக்க அரசியல்வாதியான Giorgio La Pira அவர்களின் அறக்கட்டளையைச் சார்ந்த ஏறத்தாழ இருநூறு உறுப்பினர்களை வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவைக்கும், இக்கால உலகுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்கும், Giorgio La Pira அவர்கள் வாழ்வு பற்றி சிந்திப்பது மிகவும் முக்கியம் என்று கூறினார்.

இறைஊழியர் La Pira அவர்கள், ஏழைகள் மற்றும் சமுதாயத்தில் விளிம்பு நிலையில் வாழ்வோர் மீது காட்டிய அன்பு, இவரின் ஆழ்ந்த கத்தோலிக்க விசுவாச வாழ்வு, போன்றவற்றை, Giorgio La Pira அறக்கட்டளை உறுப்பினர்கள் பின்பற்றி நடக்குமாறும் திருத்தந்தை கேட்டுக் கொண்டார்.

**மா**ர்கழி மாதம் பெருமழை ஓய்ந்து தூறலாகி குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. வீதியெங்கும் குன்றும் குழியுமாய் மழைநீர் தேங்கிக் கிடந்தது. பஸ் நின்றதும் அவளது கையைப் பிடித்து மெதுவாக இறக்கினான். நாற்பது மைல் தூரத்தை கடந்து அந்திபட்ட நேரத்தில் அந்த வசு வண்டியிலிருந்து இறங்கினார்கள். இன்னும் சாரதியையும், நடத்துனரையும் தவிர வேறு யாருமில்லை. ஓய்வுக்காக ஊர்ந்து மறைந்தது.

அவள் அவனது இரு கைகளையும் பற்றிக் கொண்டவளாக நடக்கிறாள். வாசலில் இரும்பு கேற். மாறி மாறித் தட்டுகிறார்கள். மின் குமிழ் உயிர்க்கிறது. குடையோடு வந்து கேற்றைத் திறந்தது மருமகன். “அங்கிளும், அன்ரியுமா.... வாங்க...” தட்டுத் தடுமாறி உள்ளே நுழைந்ததும் கேற்றைப் பூட்டியவன் முன்னால் நடந்தான். “ஆ... அங்கிள் அந்த வெளி பைப்ல கால்களைக் கழுவிற்று வாங்க. காலெல்லாம் சேறும் சகதியுமாகக் கிடக்கு...” கூறியபடி உள்ளே சென்றான். “ஏஞ்சலா... ஏஞ்சலா...” அவனது குரல். அவர்களது மகள் ஏஞ்சலா மாடியறையிலிருந்து வருகிறாள். வியப்பில்லை, எதிர்பார்ப்பில்லை, மகிழ்ச்சியுமில்லை. “என்னம்மா இந்த இரவு நேரத்திலதானா அண்ணா உங்கள அனுப்ப வேணும். படிச்சிரிக்கானே தவிர கொஞ்சமும் மூளையில்ல அவனுக்கு... பறவாயில்ல.... வாங்க” குழந்தையின் சிணுங்கல் கேட்கவே அறைக்குள் சென்றுவிட்டாள்.

மூடித் திறக்கும் சிப் பழுதாகி விட்டது. இரண்டு பூட்டூசிகளால் தான் அந்தப் பழைய றவலிங் பேக்கைச் சேர்த்துக் குத்தியிருந்தாள். அதைத் திறந்து தனது பழைய சாறிகளை எடுத்தவள் அவனைப் பார்த்தாள். புரிந்தது. மெல்ல எழுந்து

## பைந்தமிழ்க் குமரன் டேவிட்



பையைத் தூக்கியபடி வெளியே கார் கராஜின் பின்னால் தனித்துக் கிடக்கும் சிறிய அறையுள் நுழைந்தான். தகரக் கதவு. தூசு படிந்து எங்கும் ஒட்டடை. சாக்குக் கட்டிலில் சரிகிறான். ஏக்கங்கள் – தவிப்புகள் – வேதனைகள் அத்தனைக்கும் மேலாக அவளது நினைவுகள் “ஐ... மிஸ் ... யூ.... சாந்தி...” அவன் இதழ்கள் துடித்துத் துவள்கின்றன. நேற்றோடு அறுபத்தாறு வயது முடிந்துவிட்டது. யாருக்குமே நினைவில்லை. காலையில் தேநீர்க் கோப்பையை வைத்தவள் அவனது தளர்ந்த கைகளைப் பிடித்தாள். “இண்டைக்கி உங்கட பிறந்த நாள்..... ஞாபகமிரிக்கா....” அவன் முகத்தை கூர்ந்து பார்த்தாள். அந்த ஒரு நிமிடத்தில் தான் கடந்து வந்த அத்தனை பிறந்த தினங்களையும் நினைத்தான். சோகம், ஏக்கம், விரக்தி நிறைந்த பெருமூச்சு வெளிப்பட்டது. கண்களில் இரண்டு கண்ணீர்த் துளிகள். அவள் பதறினாள். அவன் கண்களைத் துடைத்தாள். குழிவிழுந்த அவள் கண்களிலிருந்து அவளையறியாமலே கண்ணீர்த் துளிகள் அவன் மடியில் விழுந்தன. “அன்ரி... அன்ரி...” மருமகனின் குரலால் தடுமாறியபடி வெளியேறிவிட்டாள். ‘அம்மா .... அம்மா’ என்று அவள் கால்களையே சுற்றி வந்த மகள். ஓ.எல் தாண்டும்வரை தலைவாரிக் கட்டக்கூடத் தெரியாது. சோற்றைப் பிசைந்து ஊட்டிதான் அனுப்ப வேண்டும். இரவில் தாயைக்



கட்டிக்கொண்டுதான் உறங்க வேண்டும். குண்டுப் பெண்ணாக தத்தித் தத்தி நடந்தபோது அடைந்த மகிழ்ச்சி அவளது மழலைப் பேச்சிலே கண்ட பேரின்பம் எல்லாமே அவளது திருமணத்துடன் மாறிவிட்டன. தன் கணவன், தன் குழந்தை, தன் குடும்பம் என்றான போது தாயையும், தந்தையையும் பார்க்கக்கூட அவளுக்கு நேரமில்லை.

மகன் எஞ்சினியர். மருமகள் டொக்டர். ஏழு வயதில் ஒரு மகன் அவர்களுக்கு. இங்கு மகளும் மருமகனும் லோயர்ஸ். இரண்டு வயதில் ஒரு குழந்தை. அந்த வீட்டில் சில மாதங்கள் இந்த வீட்டில் சில மாதங்கள் என்று அவர்களுடைய வாழ்க்கையின் கடைசிப் பக்கங்கள் கழிந்தன. ஓய்வு பெற்ற அதிபர் மகேந்திரன். அவரை விட ஐந்து வயது குறைவான அவர் மனைவி சாந்தி. முதுமை அவர்களை வெகுவாகத் தளர்த்தி விட்டது.

சாக்குக் கட்டிலில் மூட்டைப் பூச்சிகள் குத்தின. கடந்த மூன்று மாதங்களும் இவை பட்டினியாகவா வாழ்ந்திருக்கும். முப்பத்திரெண்டு வருடகால திருமண வாழ்க்கையை மனம் அசைபோட்டது. கிராமத்து மண்ணிலே பட்டாம்பூச்சியாக சிறகடித்த காலங்கள் யுத்த காலத்தில் இளமையை எங்கோ தொலைத்துவிட்டு கல்விக்காக ஓடிய நினைவுகள் மாறிய நாட்களில் அவளின் கரம் பற்றியபோது தன் சிறகுகளை இழந்ததான ஒரு கவலை வந்து வந்து போனது. தனக்காக சிலுவை சுமந்தவள் அவளை கண்டுகொள்ளாமலேயே கழித்துவிட்ட பல வருடங்கள், புகழ், பட்டம், பதவி, பிள்ளைகள், அவர்களது கல்வி, எதிர்காலம் எனும் ஓட்டப் பந்தயத்தில் தொலைக்கப்பட்ட காலங்கள் இவற்றுக்காக அவன் மனம் ஏங்கியது. முன்பெல்லாம் அவனோடு பேசவென்று ஆசையாக வருவாள். ஒதுக்கிவிட்டு தன் பாட்டிலே திரிவான். இப்போது எவ்வளவோ பேச ஆசைப்படுகின்றான். அவளுக்கு நேரமில்லை. வீட்டு வேலைகள், பேரப் பிள்ளைகளை பராமரிப்பது, உடைகள் கழுவி, வீடு சுத்தமாக்கி, சமையல் செய்து அறுபத்தொரு வயதுக்கும், வயோதிபத்திற்கும் பொருந்தாத வேலைகள் செய்கிறாள். எந்த நேரத்திலும் அவளது சேவை தேவைப்படலாம். அதனாலே வீட்டினுள் ஒதுக்குப் புறத்தில் உறங்குகின்றாள்.

அவனுடைய தளர்ந்த நெஞ்சு விம்மித் தணிகிறது. ஏக்கப் பெருமூச்சுகள். தன் தாய், தந்தை, சகோதரர்கள் இளவயதில் பறிகொடுத்த தம்பி இவர்களது முகங்கள் மாறி மாறி வந்து போகின்றன. 'எங்களோட வந்துவிடு மகனே' என்று இரு கரம் நீட்டி அவன் தந்தை அழைக்கிறார். சுவாசம் கூடி அதிகரித்து மெல்லத் தணிந்து கண்களை அகலமாய்த் திறந்து பார்க்கிறான். அவளை கடைசியாக ஒரு தடவைப் பார்த்துவிடமாட்டோமா? மேல்மாடியில் பேரப்பிள்ளையை தாலாட்டுகிறாள்.

'கண்ணுறங்கு கண்மணியே.... கண்ணுறங்காய் ....' காதில் ஒலித்த அவளது குரல் இதயத்துள் கலந்து உணர்வோடு ஒன்றிப் போக இமைகளை மூடுகின்றான். பஞ்சடைத்த அவனது கண்களுக்குள் அவளது கடைசிப் பார்வை பதிந்து கிடந்தது. அவனது அன்பான இதயம் மெல்ல மிக மெல்ல அமைதியாயிற்று. ■

## போராளுமன்றம்

கடுகுக் கதை - 94



அன்ரனின் சின்னமகன் தகப்பனிடம் வந்தான்.
"அப்பா.... அப்பா.... சோதின எல்லாம் முடிஞ்சிற்று அப்பா.... எனக்கு சி.டி ஒண்டு எடுத்துத் தாங்கப்பா....."

கொஞ்சகாலம் கார்ட்டூன் சி.டி. ஒன்றும் எடுத்துக் கொடுக்கவில்லை.

"சரி..... சரி..... எந்த கார்ட்டூன் வேணும்....?"

"அப்போய்...... எனக்கு கார்ட்டூன் சி.டி வேணாம்.... சண்ட சி.டி தான் வேணும்...."

"என்ன .... ஜோன்சினா வா....?"

"இல்ல.... அப்பா... பார்ளிமென்ட் சி.டி தான் வேண்டும்....."

அன்ரன் ஓடிந்துபோய் உட்கார்ந்துவிட்டார்.
"நம்முடைய முன்னுதாரணம் எப்படிப் போய் முடிகிறது பார்" என்று அன்ரன் எண்ணிக் கொண்டார்.

– பற்றி

# வாழ்த்துகிறோம்



மீன்பாடும் தேனாடாம் மட்டுமா நாகரில்
மெல்லெனக் காற்று சட்டெனப் புகுந்து வரும்
சாலையோரம் தென்றல் பாடிவரும்
வாவிக்கரையோரம் கிழக்கு திசைதனிலே
செப்பிடும் மாந்தர் புடைசூழ பவனிவரும்
செபஸ்தியார் பெயர் கொண்ட ஆலயம் அருகினிலே
சாந்தமான குணமுடையாள் எங்கள் மற்றில்டா
சகலரையும் மனம் நெகிழ வைத்திட்டாள் இன்று.

ஆசான் ராஜேந்திரம் - அனலின் இருவரும்
அன்புடன் கரம் பற்றி வாழ்ந்திட்ட பெருமக்கள்
ஆசையுடன் பெற்றெடுத்த நால்வரில்
ஆசைக்கொரு மகளாக அவதரித்தாள் இவள்.
ஆரம்ப, இடைநிலைக் கல்விதனை கற்றுத்தேற
ஆர்வமுடன் பயின்றிட்டாள் புனித.திரேசம்மாள் பள்ளியிலே.
உயர் நிலைக் கல்வியினை உவப்புடனே நிலைநாட்ட
ஊக்கமுடன் பயின்றிட்டாள் புனித.மிக்கேல் கல்லூரியிலே.

களனிப் பல்கலைகழகமதில் காலூன்றி நீ பயின்று
கட்டிளமை பருவமதில் புவியியல்துறை பட்டதாரியானாய்.
பாலகரை பண்புடன் பயிற்றுவித்தாய் புனித.சிசிலியா பள்ளியில்.
வாசிகசாலைப் பொறுப்பாளரானாய் புனித.மிக்கேல் கல்லூரியில்.
ஆசிரிய சேவையில் 84 இல் கண்டியில் கால் பதித்த நீ
ஆசிரியம் மலர எண்ணி டிப்ளோமாவும் பயின்றிட்டாய்
ஆசிரிய மத்திய நிலையமதில் விரிவுரையாளராக
ஆரம்பப் பிரிவு ஆசான்கட்கு அறிவு தனை பெருக்க எண்ணி
வாஞ்சையுடன் நிகழ்ச்சித் திட்டப் பொறுப்பாளராயிருந்து
வெற்றியுடன் உளவளத்துறை துணையாளராக பணி பல செய்தாய்.

புனித.திரேசா வித்தியாலய அதிபராக நீ இருந்து
புனிதமான ஆசிரிய சேவையில் ஓய்வு பெற்றாய்.
மட்டக்களப்பு மறை மாநில சமூகத் தொடர்பு நிலையமதில்
மலர்வேந்தன் ஆற்றிய பணியினைத் தொடரவென
ஆயரின் அனுமதியுடன் சேவை புரிந்திட வந்து நின்று
அயராது நின்றுழைத்தாய் எம் சமூகப் பணி மேலோங்க
தொண்டன் பத்திரிகையின் துணை ஆசிரியராக நீ இருந்து
தொடர்ந்திட்டாய் மூன்று வருட சேவைதனை
பண்புள்ளம் கொண்ட, எழுத்தாற்றல் மிக்க சோதரியே
பார் போற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தாயே
பல்லாண்டு காலம் மாண்புடன் நீ வாழ்கவென
வாழ்த்துகின்றோம், போற்றுகின்றோம் யாம் உம் சேவைதனை
இறைவனின் ஆசீருடன் நீடூழி காலம் வாழ வேண்டுமென!

நன்றி

**ஆக்கம்:** P.D.A. **ஜெயக்குமார்**

சமூகத் தொடர்பு நிலையத்தில் "தொண்டன்" சஞ்சிகையின் இணையாசிரியராக கடந்த நான்கு வருடங்களாகப் பணியாற்றி 30.10.2018 அன்று ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி. **மற்றில்டா இராஜேந்திரம்** அவர்களுக்கு தொண்டன் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 09

1) "நாம் பிறப்பதே இறப்பதற்குத்தான்" என்று சொன்ன தத்துவஞானியின் பெயர் என்ன?

2) "மூளை வளர்ச்சி குன்றியவன்" எனக் கருதப்பட்டு பிற்காலத்தில் சிறந்த ஆராய்ச்சியாளராகவும், கண்டுபிடிப்பாளராகவும் ஆனவர் யார்?

3) 4 அல்லது 5 தினமும் அப்படியே சாப்பிடக் காசநோயைத் தணிக்கும் பூ எது?

4) திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்ட முதலாவது சமூகப் போதனை மடல் யாது?

5) திருத்தந்தை பிரான்சிஸ் எப்போது திருத்தந்தையாகத் தெரிவானார்? எந்த இடத்தில் சமூக அநீதிகளுக்கு மத்தியில் பணியாற்றினார்?

6) மரணதண்டனை நிறைவேற்றும் சட்டத்தை அனுமதிக்க மறுக்கும் கடிதம் யாரால், எப்போது வெளியிடப்பட்டது?

7) ஜெருசலேமின் மதிற்சுவர்கள் எந்த ஆண்டில், யாருடைய உத்தரவின் பேரில் தரை மட்டமாக்கப்பட்டன?

8) இருபதுபேரைக் கொன்ற யோனாத்தானுடன் இணைந்து செயற்பட்டவன் யார்?

9) "இன்று உணவுண்பவன் சபிக்கப்பட்டவன் என்பது 2ம் தந்தையின் ஆணை" யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

10) சிப்போல் எனும் விமானநிலையம் உள்ள ஐரோப்பிய நாட்டின் பெயர் என்ன?

பெயர் : ..................................

முகவரி : ..................................

..................................

அனுப்பவேண்டிய பங்கு : ..................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 09,**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 30.11.2018




பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்
முடிவுத் திகதி 30.11.2018

## (சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. சவுல், சாமுவேலிடம், "ஆண்டவரின் குரலுக்கு நான் செவி கொடுத்தேன், அவர் காட்டிய வழியிலும் சென்றேன். அமலேக்கியரின் மன்னன் ஆகாகைக் கொண்டு வந்தேன். ஆனால், ........................ அழித்துவிட்டேன்.

   அ) அமலேக்கியரை ஆ) பெலிஸ்தியரை இ) கேனியரை

2. வீரர்கள் கடவுளுக்குக் கில்காலில் பலி செலுத்த, தடைசெய்யப்பட்ட கொள்ளைப் பொருளினின்று சிறந்த ஆடுகளையும், ........................ கொண்டு வந்தனர்" என்றார். சாமுவேல் "ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது பலிகள் செலுத்துவதா? கீழ்ப்படிவதா? நீர் ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்தீர். அவரும் உம்மை நீக்கிவிட்டார்" என்றார்.

   அ) செம்மறிகளையும் ஆ) வெள்ளாடுகளையும் இ) மாடுகளையும்

3. சவுல் சாமுவேலிடம், "நான் ........................ செய்துவிட்டேன். தயைகூர்ந்து இப்பொது என் பாவத்தை மன்னியும். நான் ஆண்டவரைப் பணிந்து தொழுவேன்" என்றார். சாமுவேல் "நான் உம்மோடு திரும்ப வரமாட்டேன்" என்று கூறிச் செல்லத் திரும்பியபோது சவுல் அவரது ஆடையின் விளிம்பைப் பிடிக்க, அது கிழிந்தது.

   அ) குற்றம் ஆ) பாவம் இ) பிழை

4. அப்போது சாமுவேல், "........................ இன்று இஸ்ரயேல் அரசை உம்மிடமிருந்து கிழித்து, உம்மை விடச் சிறந்த ஒருவனுக்குத் தந்துவிட்டார். 'இஸ்ரயேலின் மாட்சி' ஏமாற்ற மாட்டார், மனம் மாறவும் மாட்டார். மனம் மாற அவர் என்ன மனிதரா?" என்றார்.

   அ) ஆண்டவர் ஆ) இறைவன் இ) கடவுள்

5. மீண்டும் சவுல், "நான் தவறிவிட்டேன். என்னோடு திரும்பி வாரும்" என்றார். சாமுவேல் திரும்பிச் சவுலின் பின்னே செல்ல, சவுலும் ஆண்டவரைப் பணிந்து ........................ . சாமுவேல் "ஆகாகை என்னிடம் கொண்டுவாரும்" என்றார். ஆகாகு "சாவின் கொடுமை அகன்றது" என்றான்.

   அ) தொழுதார் ஆ) வணங்கினார் இ) பலிசெய்தார்

6. அதற்குச் சாமுவேல் "பெண்கள் உனது வாளால் பிள்ளையற்றோர் ஆகியதுபோல, உன் தாயும் பெண்களுக்குள் பிள்ளையற்றவள் ஆகட்டும்" என்று கூறி, கில்காலில் ஆண்டவர் திருமுன் ........................ துண்டு துண்டாக வெட்டினார்.

   அ) சவுலை ஆ) ஆகாகை இ) வீரனை

7. அதன்பின் சாமுவேல் ........................ செல்ல, சவுலும் கிபயாவிலிருந்த தம் வீட்டுக்குச் சென்றார். சாமுவேல் இறக்கும்வரை சவுலை மீண்டும் பார்க்கவில்லை. ஆனால், சவுலுக்காகத் துக்கம் கொண்டாடினார். ஆண்டவரும் சவுலை அரசராக்கியதற்கு வருந்தினார்.

   அ) கிபயாவுக்கு ஆ) இராமாவுக்கு இ) இஸ்ரயேலுக்கு

8. ஆண்டவர் சாமுவேலை நோக்கி, "இஸ்ரயேலின் அரசராகச் சவுல் இல்லாதவாறு நான் அவனைப் புறக்கணித்ததை நீ அறிந்திருந்தும், நீ எவ்வளவு ........................ அவனுக்குத் துக்கம் கொண்டாடுவாய். உனது கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு போ.

   அ) நாள் ஆ) வாரம் இ) காலம்

9. "பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன்: ஏனெனில்அவன் புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்துள்ளேன்" என்றார். சாமுவேல் "எப்படிப் போவேன்? சவுல் கேள்விப்பட்டால் என்னை ........................ விடுவானே?" என்றார்.

   அ) வெட்டி ஆ) பிடித்து இ) கொன்று

10. மீண்டும் ஆண்டவர், "நீ ஒரு ........................ எடுத்துச்செல்! 'ஆண்டவருக்குப் பலியிட வந்துள்ளேன்' எனச் சொல்: ஈசாயைப் பலிக்கு அழைத்திடு. அப்பொழுது நீ செய்யவேண்டியது என்னவென்று உனக்கு நான் தெரிவிப்பேன்: உனக்குக் காட்டுகிறவனைத் திருப்பொழிவு செய்" என்றார்.

    அ) ஆட்டுக்குட்டியை ஆ) கன்றுக்குட்டியை இ) செம்மறியாட்டை

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)

# அறிவை வளர்ப்போம் - 186



பரிசுப் போட்டி

(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**31.12.2018**

1. உலகின் தெற்குமுனையில் அமைந்துள்ள தலைநகரம்:
   (வெலிங்டன் - ஜப்பான் - நியூசிலாந்து)

2. ஆசிய நாடுகளில் "மைக்கா" அமதிகமாகக் கிடைக்கும் நாடு:
   (வடகொரியா - ஜப்பான் - இந்தியா)

3. ஹஸ்மோனிய இராச்சியம் நீடித்த ஆண்டுகள்:
   (102 - 103 - 104)

4. புனித இஞ்ஞாசியாரின் குழுவினர் 1537ல் தம்மை "இயேசுவின் குழுவினர்" என அழைத்த நகரம் :
   (வெனிஸ் - உரோம் - பார்சிலோனா)

5. "அடாது செய்தவன் படாது ..................." :
   (வருத்தப்படுவான் - படுவான் - வருந்துவான்)

6. அகங்காரம் எனும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல்:
   (கோபம் - செருக்கு - பொறாமை)

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..............................................................

பரிசு அனுப்பவேண்டிய பங்கு:

..............................................................

அனுப்பவேண்டிய முகவரி:
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 186
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.




# போட்டி முடிவுகள்...

**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 184,**

பங்கு பற்றியோர் 14 பேர், இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதியோர் 06 பேர்.

## திருவிவிலியம் கற்போம் – 184 விடைகள்

பெலிஸ்தியருக்கு, சவுலிடம், கல்லை, பலிபீடம், கடவுளை, இப்பாவம், வீரர்களும், சீட்டு, சாவதற்கு, சாவினின்று

## அறிவை வளர்ப்போம் – 184 விடைகள்

1. ஹெயிட்டி
2. பாங்கொக்
3. தங்கத்தாத்தா
4. 26.03.1967
5. அங்கதம்
6. மிடுக்கு

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 1ம் பிரிவில் 300/= பரிசு பெறுவோர்:**

* L. லபிஷா,
  C/O சோபனா,
  இளங்கோ வீதி குறுக்கு,
  கனகநகர், தம்பிலுவில் - 01.

* வரப்பிரகாசம் சுசானா,
  கடற்கரை வீதி,
  களுவாஞ்சிக்குடி.

* S.R. யூடித் மரியா,
  25/7, 1ம் குறுக்கு,
  சின்ன ஊறணி, மட்டக்களப்பு.

* க. அஸ்வின்,
  59/1, கதிர்காமர் வீதி,
  அமிர்தகழி.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 136 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* T. றொளின் வினோஸ்,
  282, தேவி வாசா,
  பழைய கல்முனை வீதி,
  நாவற்குடா.

**2ம் பரிசு - 300/=**

* மெடலின் சில்வா,
  81/38, நாவலர் வீதி,
  கருவப்பங்கேணி,
  மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* R. அர்ச்சனா,
  சொமஸ்கன் மியாணிநகர் (S.R),
  தன்னாமுனை.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

# நற்செய்தி அறிவிப்பு ஆண்டு

நற்செய்தி அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு !

1 கொரி 9:16

## 2018 - 2019



## YEAR OF EVANGELIZATION

Woe to me if I do not preach the gospel!

1 Cor 9:16

DIOCESE OF BATTICALOA



# காற்றில் கலந்து வரும் .....

இலங்கை வானொலி தேசிய சேவை

மார்கழி - 2018

## கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் - தமிழ்

கத்தோலிக்க நற்சிந்தனைகள் - காலை 5.55 மணி

நாள் : மார்கழி - 8, 9, 10, 11, 12, 13, 14 , 22, 23, 24, 25, 26, 27, 28

புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) - மாலை 07.00 மணி

நாள் : 2, 16 திருவிவிலிய நாடகம், திருஅவைச் செய்திகள், வழிபாடு, பாடல்கள் ...

சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) - மாலை 04.00 மணி

நாள் : 6, 18 கதையும் கருத்தும், குறு நாடகம், திருவிவிலியக் கதைகள், பாடல்கள்...

| | | | |
|---|---|---|---|
| புதிய உலகம் | 24.12.2018 | கிறிஸ்து பிறப்பின் திருவிழிப்பு | மாலை 4.30 மணி |
| புதிய உலகம் | 25.12.2018 | கிறிஸ்து பிறப்பு விழா | மாலை 4.15 மணி |
| புதிய உலகம் | 26.12.2018 | முதல் மறைசாட்சி | மாலை 7.30 மணி |
| புதிய உலகம் | 28.12.2018 | மாசில்லாக் குழந்தைகள் விழா | மாலை 7.30 மணி |
| புதிய உலகம் | 30.12.2018 | திருக்குடும்ப விழா | மாலை 7.00 மணி |
| புதிய உலகம் | 31.12.2018 | நன்றி நல்கும் நாள் விழா | மாலை 5.00 மணி |
| புதிய உலகம் | 01.01.2019 | புத்தாண்டு விழா | மாலை 9.30 மணி |

தொண்டன் வாசகர்கள், எழுத்தாளர்கள்,
விற்பனையாளர்கள், ஆலோசகர்கள்,
நலன்விரும்பிகள் அனைவருக்கும்
கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட வாழ்த்துகள்!

தொடர்பு : சமூகத் தொடர்பு நிலையம், அ.பெ.எண் - 44, மட்டக்களப்பு.